விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 25 சனிக்கிழமை (11.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 357

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சிறைகளிலுள்ள கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## நவநீதம்பிள்ளை வலியுறுத்தல்

(ஜெனீவா)

**ஜனநாயகத்துக்காகப் பாடுபட்ட சிறைகளிலுள்ள கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவர் நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார். மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.** *(16ஆம் பக்கம் பார்க்க)*

மனித உரிமைகள் தினத்தையொட்டி நேற்று கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது...



## இலங்கையில் மர்ம விமானம் அச்சத்தில் விமானப்படை!

(கொழும்பு)

இலங்கையில் நேற்றுக் காணப்பட்ட மர்ம விமானம் ஒன்றின் காரணமாக விமானப்படை வட்டாரங்கள் அச்சத்தில் உறைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அவிசாவளையை அண்மித்த பிரதேசத்திலேயே குறித்த விமானம் தென்பட்டுள்ளது.

அப் பிரதேசத்தின் கரந்தெனிய கொஹிலகெதர பிரதேசத்தில் மிகவும் தாழ்வாக பறந்த ஹெலிகொப்டர் ஒன்று தரையிறங்க முற்படுவது போன்று தென்னை மர உயரத்துக்கு தாழ்ந்து வந்துள்ளதை பிரதேசவாசிகள் பலர் கண்டிருக்கின்றனர்.

அதன் பின்னர் ஹெலிகொப்டர் திடீரென மேலெழுந்து பறந்துள்ளது. ஹெலிகொப்டர் இலங்கை விமானப்படையினரின் ஹெலிகொப்டரை ஒத்திருந்ததாக பிரதேசவாசிகள் கூறுகின்றனர். பொலிஸாரிடம் இருந்து கிடைத்த தகவலையடுத்து *(16ஆம் பக்கம் பார்க்க)*

## ஆயுத மோதலில் பொலிஸார் இருவர் பலி

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்தில் அம்பேபுஸ்ஸவில் பொலிஸாருக்கும் ஆயுதக்குழுவொன்றுக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் பொலிஸார் இருவர் பலியானதுடன் வேறு இருவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரகாபொலவில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பான சந்தேக நபர்களை துரத்திச் சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச-5)

## காணாமல் போன யுவதி நேற்றுச் சடலமாக மீட்பு

### வடமராட்சியில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

புலோலி தெற்கில் கடந்த 29ஆம் திகதி காணாமல்போன யுவதி நேற்று கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த அரியநாயகம் துளசி (வயது 19) என்ற யுவதியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, கடந்த மாதம் 29ஆம் திகதி பிரஸ்தாப யுவதி காணாமல் போயிருந்தார். இது தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

இந் நிலையில் நேற்றுக் காலை புலோலி அ.மி.த.க. பாடசாலைக்கு அண்மை *(15ஆம் பக்கம் பார்க்க)*

## 2011 இற்கான வரவு செலவுத்திட்டம் 116 வாக்குகளால் நிறைவேற்றம்

(கொழும்பு)

2011ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம் நேற்று மாலை இலங்கை நாடாளுமன்றத்தில் 116 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 156 வாக்குகளும் எதிராக 40 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு ஆகியன எதிராக வாக்களித்தன.

இந்த நிலையில் வாக்கெடுப்புக்கு முன்னர் சபையில் பிரசன்னமாகியிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு 26 வருடங்களுக்குப் பின்னர் உதயமாகிய சமாதானமான நிதி வருடம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கை இராஜதந்திரிகள் ஒழுங்காக செயற்படவில்லை

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சில இலங்கை இராஜதந்திரிகள் கடமையை உரிய முறையில் மேற்கொள்வதில்லை என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த இராஜதந்திரிகள் தமது கடமைகளை சரியான முறையில் மேற்கொள்ளாத காரணத்தினால் ஜனாதிபதி ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டது.

இலங்கை இராஜதந்திரிகள் நாட்டின் மீது அக்கறையுடன் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## 300 கார்களின் ஊர்வலத்துடன் வேலூருக்குச் சென்றார் சீமான்



(சென்னை)

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் நேற்று விடுதலையானார்.

தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டமை குறித்து வன்முறையைத் தூண்டும் விதத்தில் பேசினார் என்ற குற்றச்சாட்டில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்ட இயக்குநர் சீமான் மீது தமிழக அரசு தேசியப் பாதுகாப்புச் சட் *(16ஆம் பக்கம் பார்க்க)*

அன்றும் சரி இன்றும் சரி என்றும் சரி வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனம்

தனது புத்தம் புதிய கிளையை இலக்கம் 770,772, கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்தி எனும் முகவரியில் ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு புத்தம் புதிய தெரிவில் புதிய டிசைனில் புதுப்பொலிவு கொண்ட

நல்லூர் சரவணா ரெக்ஸ்

எமது வியாபார நிறுவனத்தில் 2011ஆம் ஆண்டிற்கான புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட சிறுவர், சிறுமிகள், ஆண்கள், பெண்கள் என அனைவரது ஆடைத் தெரிவிற்கும் ஒரே இடம்

ஏழு நாட்களும் கடைதிறந்திருக்கும்

முகவரியை மறந்து விடாதீர்கள்

நல்லூர் சரவணா ரெக்ஸ்
770, 772, கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 021 222 0421

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர்கள் பெரும்பான்மையாக மாற தமிழர்களே காரணமானார்கள் !

## பேராசிரியர் கீத பொங்கலன் உரை

(யாழ்ப்பாணம்)

பெரும்பான்மை இனம் என தம்மை எண்ணிக்கொண்டு சிறுபான்மைக் கட்டமைப்புக்குள் தமிழர்கள் இருந்துகொண்டதால் சிங்களவர்கள் பெரும்பான்மை இனமாக தோற்றம் பெற்றனர்எனகொழும்புபல்கலைக்கழக அரசறிவியல்துறைபேராசிரியர்ஈஸ்ஸ ஐ.கீதபொங்கலன் தெரிவித்தார்.

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குனர் சபையினால் சேர் பொன். இராமநாதனின் நினைவுப் பேருரை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, தமிழன் எல்லாவற்றையும் இழந்துவிட்ட நிலையிலும் எதையும் இழக்காதவன் போல் இருக்கின்ற இயல்பை எவ்வாறு விமர்சிக்காமல் இருக்க முடியும்.

கடந்த காலங்களில் விடப்பட்ட தவறுகளை திருத்திக் கொள்வதற்கும் அவ்வாறான தவறுகள் மீண்டும் ஏற்படாத வகையில் நடந்து கொள்வதற்காகவுமே விமர்சனங்கள் செய்யப்படுகின்றன.

விமர்சனங்கள் செய்வது எமக்குப் பிடித்தமானதல்ல. ஆனால் விமர்சனங்கள் செய்வேண்டிய சூழ் நிலையில் நாம் உள்ளோம்.

எமது நாட்டைப் பொறுத்தவரை ஒன்றும் இல்லாதவர்கள் உயர் குழாமில் உள்ளார்கள். ஆனால் எல்லாம் உள்ளவர்கள் எதுவுமே இல்லாதவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

சிங்களவர்கள் பெரும்பான்மையினமாக மாற தமிழ் இனமே காரணமானது. தாம் பெரும்பான்மை இனம் என தம்மை எண்ணிக் கொண்டு சிறுபான்மை கட்டமைப்பிற்குள் தமிழர்கள் இருந்து கொண்டனர். இத்தகைய நிலையில் சிங்களவர்கள் பெரும்பான்மை இனமாக தோற்றம் பெற்றனர்.

1950ஆம் ஆண்டுகளில் சிங்களவர்களை விட தமிழர்களே அதிகமாக இருந்தனர். அது மட்டுமன்றி தேசிய ரீதியில் சிறந்தவர்களாக தமிழர்களே இருந்திருக்கின்றனர்.

1900 ஆண்டுகளை அரசியல் ரீதியாகப் பார்த்தால் அது பொன்னம்பலம் சகோதரர்களின் காலம் என்றே கூற முடியும். அவ்வாறான முறையில் பொன்னம்பலம் சகோதரர்களின் பங்களிப்பு இருந்துவந்தது.

அது மட்டுமன்றி அரசியல் ரீதியாகவும் முற்போக்கு சிந்தனையாளர்களாகவும் செயற்பட்டு வந்தனர். குறிப்பாக சேர். பொன்.இராமநாதனின் சமூக சீர்திருத்தப் பணியில் சாதிப்பாகுபாடு, தீண்டாமை, சீதனப் பிணக்கு என்பவற்றுக்கு எதிராக செயற்பட்டு வந்தார்.

முற்போக்கு சிந்தனைவாதியாக மட்டுமன்றி நாட்டுப்பற்றாளராகவும் அவர் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார். குறிப்பாக பிரித்தானிய நாட்டின் ஆட்சியை எதிர்த்து அவர்களின் கொடியை எரிப்பதும் இலங்கைக் கொடியை ஏற்றுவதும் தேர்தல்களை பகிஷ்கரிப்பதும் என பல எதிர்ப்புக்களைக் காட்டிவந்தார்.

சிங்களவர்களுக்கு ஆதரவாக செயற்பட்ட தமிழ் அரசியல் தலைவர்களில் சேர் பொன்.இராமநாதன் முக்கியமானவர். இத்தகைய நிலை பிற்காலத்தில் தமிழர்களுக்கு பாரதூரமான விளைவுகளைத் தோற்றுவித்துவிட்டது.



இதேவேளை 1921 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் தமிழர்களுக்கு விசேட ஆசனம் என்ற கேள்வி எழுப்பப்பட்டபோது அதை சிங்களவர்கள் மறுத்துவிட்டனர்.

தமிழர்களுக்கு தனி நாடு வேண்டும் என விடுதலைப் புலிகள் இயக்கம் கோரியிருந்தது. இதனை இந்தியா ஏன் மறுத்தது என்பதை நோக்கின் இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரானதாக இவர்களின் கோரிக்கை இருந்தமையே எனவே தமிழர்களின் இத்தகைய நிலைக்கு தமிழர்களே காரணம் என அவர் மேலும் தெரிவித்தார் (ச-6)

## இரவு வேளைகளில் ஹயஸில் சென்று திருடர்கள் அட்டகாசம்

தட்டாதெருவில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை திருட்டு முயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டுள்ளது. கே.கே.எஸ்.வீதி தட்டாதெருச் சந்திக்கு அண்மையாகவுள்ள வீட்டிற்குத் திருடர்கள் புகுந்து அட்டகாசம் செய்துள்ளனர். இது குறித்து தெரியவருவதாவது,

ஹயஸ்வானில் வந்த திருடர்கள் இலங்கை வங்கியின் முகாமையாளர் விஜயரத்தினத்தின் வீட்டிற்குள் புகுந்து முன் கதவினை காலால் உதைத்து ஆயுதமுனை கொள்ளையர்போல் நடித்துள்ளனர். இவ்விடயத்தை தொலைபேசி ஊடாக அயலவர்களுக்குத் தெரிவித்து சத்தமிடவே அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். அவர்களை திடீரென வந்த ஹயஸ்வான் ஏற்றிச் சென்றுள்ளது. இச்சம்பவம் குறித்து யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-5)

## சிந்தனைக் கூடத்தில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"சிந்தனைக் கூடம்" அமைப்பின் ஏற்பாட்டில் "தமிழ் அரசியலும் சர்வதே சமும் இன்றையநிலை" எனும் பொருளிலான கருத்தரங்கு இன்று காலை 10.30 மணிக்கு இல.07, இரத்தினம் வீதியில் அமைந்துள்ள அமைப்பின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் அரசியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஈ.எஸ்.ஐ.கீதபொங்கலன் கருத்துரை வழங்குவர். (ச-8)


செல்லா/சினிமா [நாதனிஸ்]
03.12.2010 முதல்
ஆர்யா, ஸ்ரேயா, சந்தானம் நடித்த




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30

DMI ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L-DAY CLASS

புவியியல் –N.BABU

ஆரம்பம் – 13.12.2010
திங்கள் – 8am
* அலகு ரீதியான மீட்டல் நடைபெறும்

(3226)

யாழ்ப்பாணம் – நல்லூர் அரசடி வீதி
அருள்மிகு ஸ்ரீ செல்லப்பிள்ளையார் தேவஸ்தானம்
பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டா பஞ்சகுண்டபக்ஷமகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்
12.12.2010 ஞாயிறு



யாழ்ப்பாணம் நல்லூர் அரசடி வீதியில் எழுந்தருளியிருந்து வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றை யெல்லாம் அருள் பாலித்து கொண்டிருக்கின்ற செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஞ்சமுக பிள்ளையார் பிரதிஷ்டை நாளையதினம் (12.12.2010) நடைபெறவுள்ளது. அன்றையதினம் எம்பெருமான் அடியார்கள் ஆசார சீலர்களாக கலந்துகொண்டு எம்பெருமானின் அருளை பெற்றுய்வீர்களாக.

கிரியா கால விபரம்

10.12.2010 வெள்ளி பின்னிரவு அதிகாலை 4.00 மணிமுதல் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம்.
11.12.2010 சனி காலை 7.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை அடியார்கள் பால்காப்பு சாத்துதல்.
12.12.2010 ஞாயிறு காலை 5 மணிமுதல் விஷேட யாகபூசை போன்ற பூர்வாங்க கிரியைகள் இடம்பெற்று காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம். தொடர்ந்து மஹா அபிஷேகம் விஷேட பூஜை நடைபெறும்.
அன்றையதினம் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரை நடைபெறும்.
மாலை 5.00 மணிமுதல் மூலஸ்தானப் பூஜை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எம்பெருமான் கன்னி வீதியுலா வருவார். (பருத்தித்துறை வீதியூடாக கந்தபுராண வீதியை வந்தடைந்து அதனூடாக ஆலயத்தை வந்தடைவார்)

குருமார் விபரம்

சர்வபோதகாசிரியர்
ஆகமக் கிரியாஜோதி
சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக் குருக்கள்
பிரதமகுரு நாடகமார்க்கடு சரசடிப்பிள்ளையார் ஆலயம்

கும்பாபிஷேக பிரதம குரு
சிவாச்சார்ய இளவரசு, சக்தி கிரியா வியாசகர்
சிவஸ்ரீ சிவ கமல்ராஜ் குருக்கள்
பிரதமகுரு வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

சர்வ சாதக ஆசிரியர்
சிவாகம கிரியாபூசணம்
சிவஸ்ரீ சு. ஸ்ரீரங்கநாதக் குருக்கள்
பிரதமகுரு கலட்டி அம்மன் தேவஸ்தானம்

அன்றைய தினம்
S.R.சரவணன் குழுவினரதும், ஏழுநல்லூர் நாதஸ்வர வித்துவான் P.S பாலமுருகன் குழுவினரதும் விஷேட நாதஸ்வர தவில் கச்சேரியும் இடம்பெறும்.

இங்ஙனம்
பஞ்சமுக விநாயகர் கும்பாபிஷேக உபயகாரர்
திரு. R. செல்வராசா குடும்பத்தினர்
அரசடி வீதி, நல்லூர்.
(3227)

பாராட்டுக்கள்
"உயர் பெறுபேற்றுக்கு வழிகாட்டிய உத்தமர்களைப் பாராட்டுகின்றேன்"
பருத்தித்துறை மொடோன் கல்வி நிலையத்தில் க.பொ.த உயர்தரம் 2010 இல் எனக்கு கற்பித்து முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட நிலை –I (1st Rank) பெறுவதற்கு வழிகாட்டிய ஆசிரியர்களான
* வரலாறு 'A' - R.R. ஆனந்தன் ஆசிரியர்
* தமிழ் 'A' - K. நடா ஆசிரியர்
* இந்துநாகரிகம் 'A' - P. ஜோதீஸ்வரன் ஆசிரியர்
ஆகியோருக்கு எனது மனமுவந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறேன்.
பாராட்டுக்களுடன்
பா.தேவனா
(3222)

AHAVOLI
Institute for Higher Studies offers a Diploma course in Peace Building & Community Development Practice.
The applications are called for this course. This is a one year, week-end (Saturday & Sunday) course that consists of 240 hours. The applicants should have the following prerequisites to apply for this course.
1. Knowledge of English as to read, write and speak
2. A pass in Advanced Level
3. Interested in Social Activities
Chances also would be given to those who are working in the Institutions and NGOs. The candidates will have to buy a special form from our office and submit it before the 29th of December 2010. Only 25 candidates will be selected for this course.
N.B: The Diploma Certificate would be given by the National University of Ireland, Galway.
For further details please contact
AHAVOLI
Institute for Higher Studies
Affiliated to National University of Ireland, Galway.
St.Patrick's Road, Jaffna.
Contact No: 021-222 2856
Rev.FR.S.J.RAJANAYAGAM
DIRECTOR
(3224)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இரண்டக நிலை

அலுவல் ஒன்றின் நிமித்தம் ஒருவருடைய வீட்டுக்குப் போயிருந்தேன். 'அவர் ஒரு மாதிரியான ஆள். எப்படியென்று கேட்கிறீர்களா?

நான் போன சமயத்தில் அவருக்கு முன்னால் ஒரு தட்டில் வாழைப்பழமும் இன்னொரு தட்டில் அப்பிளும் இருந்தது. இவர் பாட்டுக்கு உட்கார்ந்திருந்தார்.

"ஏன் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீங்க? சாப்பிட வேண்டியது தானே"என்றேன்.

"சாப்பிடலாம் தான். ஆனால் எதை சாப்பிடுவதென்று தெரியவில்லை. அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

"அவையிரண்டிலும் உங்களுக்கு எது பிடிக்கும்?" என்று கேட்டேன்.

"இரண்டுமே பிடிக்கும்"என்றார்.

"அப்படியானால் ஏதாவதொன்றை எடுத்துச் சாப்பிடுங்க" என்றேன்.

"அதுதான் இப்ப யோசனை. எதை முதலில் எடுப்பது? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்"என்றார்.

அந்தச் சமயத்தில் அவருடைய மனைவி வந்து சேர்ந்தார்.

"இவர் எப்பொழுதும் இப்படித் தான். எதை தேர்ந்தெடுப்பது என்று ஒரு முடிவுக்கு வருவதற்குள் அந்த இரண்டு பழங்களும் அழுகிப் போய்விடும். அதன் பின் நான் சுலபமாக ஒரு முடிவுக்கு வந்து விடுவேன்"என்றார்.

"என்ன செய்வீங்க?"என்று கேட்டேன்.

"அழுகிய பழங்களை எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவேன்"என்றார்.

"ஏன் அந்த காரியத்தை அவரே செய்ய மாட்டாரா?" என்றேன்.

"செய்வார். ஆனால் அதிலும் ஒரு சிக்கல். இவர் எடுத்துக் கொண்டு அங்கே போவார். அங்கே இரண்டு குப்பைத் தொட்டி இருக்கும். எந்தத் தொட்டியில் போடுவது? என்று யோசித்துக் கொண்டே இருந்து விடுவார்."என்றார்.

இப்படியான ஆட்களைப் பற்றி இன்று ஒரு தகவலில் கொஞ்சம் சொல்லக் கூடாதா? என்றும் அந்த அம்மா கேட்டுக் கொண்டார். அதன் விளைவுதான் இது.

இப்படியான ஒரு நிலைமையைத் தான் Dilemma என்று சொல்கிறார்கள். அதாவது இரண்டக நிலை. அந்த ஆள் ஒரு 'இரண்டும் கெட்டான்'என்று சொல்கிறோமல்லவா, அதுதான் இது.

சரியான முடிவுக்கு வரமுடியாததால் அந்த அப்பிள், வாழைப்பழம் இரண்டும் கெட்டுப் போய்விட்டதல்லவா. அப்படி இரண்டு வாய்ப்பையும் கொடுத்துக் கொள்பவன் தான் இரண்டுங்கெட்டான்!

நம்மில் பலருக்கு இந்தப் பட்டம் பொருந்தும்.

'இரண்டக நிலை' ஏற்படுவதற்கு எப்பொழுதும் நாம் தான் காரணம் என்று சொல்லிவிடமுடியாது. சூழ்நிலையே அப்படி அமைந்து விடும்.

இப்பொழுது உங்களையே எடுத்துக் கொள்வோம். நீங்கள் இந்த இரண்டக நிலைக்கெல்லாம் உட்படாத ஒரு ஆள் என்று வைத்துக் கொள்வோம்.

நீங்கள் தனியாக காட்டுவழியால் வந்து கொண்டிருக்கிறீர்கள். அப்பொழுது ஒரு திருடன் உங்கள் முன் வந்து நிற்கிறான். அவனுடைய கையில் ஒரு தடியும் சாட்டையும் இருக்கிறது.

அவன் உங்களைப் பார்த்து, 'தடியால் அடிக்கவா? சாட்டையால் அடிக்கவா?' என்று கேட்கிறான். நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? இப்படியான நிலைதான் இரண்டக நிலை. அதாவது நம் முன்னால் இருக்கும் மாற்று வழியில் அல்லது விடயங்களில் எதைத் தெரிவு செய்வதென்று நாம் திண்டாடினால் அதுதான் Dilemma இரண்டும் கெட்ட நிலையென்று சொல்லும் போது பொதுவாக நம் முன்னால் உள்ள இரண்டு விடயமும் கெட்டது என்று சொல்வார்கள்.

ஆனால் தர்க்கவியலில் அப்படி இல்லையாம். இரண்டக நிலை என்பது நல்ல விடயங்களிலும் வரலாம் என்று தர்க்கவியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். இப்ப ஒரு பையனுக்கு பெண் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சாவூரில் பார்த்த பெண்ணும் பிடித்திருக்கிறது. கோயம்புத்தூரில் பார்த்த பெண்ணும் பிடித்திருக்கிறது. ஆனால் ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்ய முடியும். யாரைத் தெரிவு செய்வது?

இதுவும் ஒரு இரண்டக நிலைதான். இப்படியான நிலைமையில் என்ன செய்யலாம்? ஒன்றில் பூவா, தலையா? போட்டுப் பார்க்கலாம். இல்லையெனில் சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்து விட வேண்டியது தான்.

கல்யாணத்தைப் பற்றி ஒரு பழமொழி உண்டு. அதாவது திருமணமென்பது ஒரு கோட்டை. உள்ளேயிருப்பவர்கள் வெளியே வருவதற்கு ஆசைப்படுகிறார்கள். வெளியே இருப்பவர்கள் உள்ளே போவதற்கு ஆசைப்படுகிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? திருமணம் செய்து கொண்டாலும் கஷ்டம். செய்து கொள்ளவில்லையென்றாலும் கஷ்டம். ஆனால் ஒரு மனிதன் இரண்டு நிலைகளில் ஏதாவதொன்றில் தான் இருக்க வேண்டும்.

இந்த இரண்டக நிலையில் ரொம்ப நாளாக இருந்து கொண்டிருந்த சிநேகிதன் ஒருத்தனை சமீபத்தில் பார்த்தேன்.

"என்னப்பா... இப்ப நீ கோட்டைக்கு உள்ளே இருக்கிறாயா? வெளியே இருக்கிறாயா?"என்று கேட்டேன்.

அவன் மொதுவாக, "கோட்டை மதில் சுவருக்கு மேலே உட்கார்ந்திருக்கிறேன்"என்றான். எந்தப் பக்கம் குதிக்கப் போகிறானோ? யாருக்குத் தெரியும்?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# விண்ணப்பம் கோரல்

(காரைநகர்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கணக்காய்வுப் பகுதியில் நிலவுகின்ற சமுர்த்தி முகாமையாளர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக (புலானாய்வு முகாமையாளர்) தகுதி வாய்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டச்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் அல்லது இலங்கை உயர் தொழிநுட்பக்கல்லூரியின் தேசிய கணக்காய்வுப் பகுதியில் பெற்ற டிப்ளோமா சான்றிதழுடன் இலங்கை சமுர்த்தி அதிகார சபையில் இணைத்துக் கொள்ளப்பட்ட கடிதத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதிப்பணிப்பாளர் (நிர்வாகம்) இலங்கை சமுர்த்தி அதிகார சபை, நாலாவது மாடி, செத்சிறிபாய, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் மேல் மூலையில் சமுர்த்தி முகாமையாளர்கள் எனக் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-246)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

உயரமுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வடமராட்சிப் பிரதேசத்திற்கான மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும் வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக மின் விநியோகம் வழங்கப்படலாம் எனவும் இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# சாதாரண தர மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கல்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்க்கு விசேட தினமாக இன்றைய தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்க காரணங்களுக்காக அடையாள அட்டைகளை இதுவரையில் பெற்றுக் கொள்ளாத மாணவர்களுக்காக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் ஆணையாளரின் விசேட கோரிக்கையின் பேரில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் பெற்றோர் அல்லது உறவினர்கள் இன்றைய தினம் ஆட்பதிவுத்திணைக்களத்தில் வந்து மாணவர்களின் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நாளைய தினமும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பாடசாலை அதிபரிடம் கலந்துரையாடி மாற்று அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-9)

# இலவச மருத்துவ சேவை

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பரிபாலன சபையினரால் நடாத்தப்படும் இலவச மருந்துவச் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை ஆலயப் பகுதியில் அமைந்த பொது நல்நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இலவச மருந்துவ சேவையில் யாழ். போதனா வைத்திய சாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி கௌரி செல்வரத்தினம், வைத்திய கலாநிதி ரி. குமணன் மற்றும் பல சிரேஷ்ட வைத்திய நிபுணர்களும் வருகை தந்து மருத்துவ சேவையும் மருந்துகளும் வழங்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 130 |
| உருளைக்கிழங்கு | 60-70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 100 |
| தக்காளி | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 50 | 60 |
| கோவா | 60 | 70 | 70 |
| கரட் | 60 | 100 | -- |
| பூசணி | 35 | 50 | 50 |
| புடோல் | 60 | 100 | 40 |
| வாழைக்காய் | 35-40 | 50 | 30 |
| சின்ன வெங்காயம் | 120-150 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 120 |
| பாகற்காய் | 160 | 200 | 150 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 50 |
| பயற்றங்காய | 200 | 220 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 |
| பீற்றூட் | -- | 80 | 70 |
| கறிமிளகாய் | 120 | 200 | 130 |
| முருங்கைக்காய் | 200 | -- | 240 |
| போஞ்சி | 120 | 140 | 90 |
| கத்தரிதம்புள்ள | 130 | 170 | 50 |
| கீரை - 1 பிடி | 35 | 30 | 25 |
| தேசிக்காய் | 60 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 40 |

# இராசி பலன்

*11.12.2010*
*(கார்த்திகை 25, சனிக்கிழமை)*
*சஷ்டி பின்னிரவு 4.22 மணி வரை*
*அவிட்டம் பின்னிரவு 2.32 மணி வரை*
*இராகுகாலம் 9.19-10.49 மணி வரை*
*சுபநேரம் 3.19-4.49 மணி வரை*
*விநாயகர் சஷ்டி விரதம்.*

**மேடம்** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், விநாயகர் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தடைப்பட்ட காரியம் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**இடபம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், சிவமைந்தன் வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** தடைப்பட்ட காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், பிரயாண அனுகூலமுண்டு, சுட்டுப் பாடான நாள், சொத்துக்கள் தொடர்பில் இருந்து வந்த இழுபறிகள் அகலும்.

**கடகம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தேவையற்ற பகைகள் வந்து சேரலாம், பிரயாணத்தில் கூடிய கவனம் தேவை, உடல் நலக் குறைவு ஏற்படலாம்.

**சிங்கம்** கணவன் மனைவிடையே ஏற்பட்ட கசப்புணர்வு அகலும், பிரயாண அனுகூலமுண்டு, தனவரவு அதிகரிக்கும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காணும் நாள், உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்கள் குறைவடையும், செல்வாக்கான நாள்.

**துலாம்** நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கலாம், தொழிலில் ஊதிய உயர்வு கிடைக்கலாம், பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் வந்து சேரும், புத்திரர் வழியில் பெருமையடையலாம்.

**விருச்சிகம்** உறவினர் வருகையுண்டு, வீடு வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கலாம், விநாயகர் வழிபாடு மகிழ்ச்சியைத் தரும்.

**தனுசு** நீண்ட நாளைய வழக்குகளில் திடீர் திசை திருப்பம் ஏற்படலாம், அயலவர்களுடன் பாசமழையில் நனைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய நாள்.


**மகரம்** எதிர்கால வளர்ச்சி கருதி புதிய திட்டங்களை வகுப்பீர்கள், இல்லத்தேவைகள் பூர்த்தியாகும், பிரியமான சிலரின் சந்திப்பு கிட்டும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** விரயங்கள் கூடும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், தொழில் நலன் கருதி புதிய கூட்டாளிகளைச் சேர்க்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** உறவினரின் அன்புத் தொல்லைக்குட்படலாம், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பர், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடமாகாண கல்வித்திணைக்களமும் இசுறுபாய கல்வி அமைச்சும் இணைந்து நடத்திய யாழ். மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கான இரண்டாம் மொழி சிங்களம் செயலமர்வு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் சிங்களம் இரண்டாம் மொழிக்கான கல்விப் பணிப்பாளர் யூ.எம்.பி.செல்வி ஜெயந்தினி நடாத்துவதனையும், அருகில் வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் டி.ஆர். தயாவன்ச, யாழ். கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எ.எஸ். சற்குணராஜா, வளவாளர் (சிங்களம் மொழி) ராமகிருஷ்ணன் ஆகியோரையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் சு.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் வே.ஞானகாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2-6)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா , யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலய ஆசிரியர் திருமதி கௌரி அம்பாள் மாணிக்கராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.(2-9)

## நாட்டார் கலைப்பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சிந்துபுர கலை இலக்கிய மன்றத்தினால் , " நாட்டார் கலைப்பாடல்" இறுவட்டு வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சிந்துபுர காந்தி ஜீ மண்டபத்தில் பெ.இராசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் வெளியீட்டுரையினை பண்டிதர் ம.கடம்பேசுவரன், ஆய்வுரையினை யாழ். புதிய உயர் கல்லூரி விரிவுரையாளர் பண்டிதர் பொன்.சுகந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-2)

## மாநகரசபை செயற்பாடுகளை உடனுக்குடன் அறிய இணையசேவை வழிவகுத்துள்ளது

### யாழ்.மாநகரசபை உறுப்பினர் மனுவல் மங்களநேசன் தெரிவிப்பு

(கொழும்புத்துறை)

இலங்கை மக்களும் உலக மக்களும் தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள இணையம் என்னும் இன்றைய தொழில்நுட்ப புரட்சி வழிவகுத்துள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதாரக் குழுத் தலைவர் மனுவல் மங்கள நேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெற்ற யாழ்.மாநகரசபை இணையத்தள அங்குரார்ப்பண வைபவம் கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்ற போது இணையத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் என்பது நேர்மையானது.இது வியாபாரம் அல்ல. இன்று சில அரசியல்வாதிகளால் வியாபாரம் ஆக்கப்பட்டுள்ளது.

மக்களுடைய நலனில் அக்கறையுள்ளவர்கள் தான் அரசியல்வாதிகள்.

இணையத்தளத்தை இலவவசமாக உருவாக்கித் தந்த EGAIT நிறுவன முகாமையாளர் ப.வசந்தனுக்கு யாழ்.மாநகர மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடமை.யாழ்.மாநகரசபையுடைய் தொழிற்பாடு என்பவற்றை இலங்கை மக்களும் உலக மக்களும் அறிந்து கொள்ளவும் ஆலோசனை கூறவும் இன்றைய தொழில்நுட்ப புரட்சி வழிவகுத்துள்ளது நன்மையானதே என்று தெரிவித்தார். (ஸ்ரீ-3-51)

## அதிபர் நியமனம்

புத்தூர், நவக்கிரி அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் புதிய அதிபராக த.இராதாகிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இப் பாடசாலையின் அதிபராகப் பணியாற்றும் சி. பகவத்சிங்கம் இம் மாதத்துடன் ஓய்வுபெறவுள்ளமையை அடுத்து இந்த நியமனம் வழங்கபபட்டுள்ளது.

இவர் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தின் சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியராக இதுவரை காலமும் பணியாற்றியிருந்தார். (ஸ்ரீ)

## கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

உள்ளூராட்சி திணைக்கள வருடாந்த இடமாற்ற கலந்துரையாடல் எதிர்வரும் 14ஆம் திகதி காலை 9 மணிக்கு திருகோணமலையில் உள்ள உள்ளூராட்சித் திணைக்கள மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அரச கடமையாற்றும் சகல தொழிற் சங்க உறுப்பினர்களில் ஒருவர் வீதம் மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறிப்பாக வடக்கு மாகாண நூலக சேவையாளர் சங்கம் சார்பில் அதன் செயலாளரும் சுன்னாகம் பொதுசன நூலகரும் ஆகிய க.சௌந்தரராஜன் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

## மாதாந்தக் கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கூட்டமும் இயக்குநர் சபைக் கூட்டமும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் உள்ள செவிப்புலன் அற்றோர் அலுவலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு உறுப்பினர்கள் அனைவரையும் உரிய நேரத்திற்கு சமுகமளித்து ஒத்துழைப்பு வழங்குமாறு வடமராட்சி லயன்ஸ் கழக செயலாளர் ந.துரைராஜா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-10)

## மதுபோதையில் வாகனம் செலுத்தியோருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஐவர் கடந்த புதன்கிழமை கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ்வழக்கை விசாரித்த யாழ்.மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர் குறித்த ஐவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-6)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொதி விநியோகம்

(உடுப்பிட்டி)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஆவரங்கால், புத்தூர், அச்சுவேலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு நேற்று முன்தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சி கோப்பாய் கிளையில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முன்னிலையில் உலருணவுப் பொதி வழங்கப்பட்டது.

இதனை கிளையின் உறுப்பினர்களான க.திரவியம், அ.பரஞ்சோதி ஆகியோர் நெறிப்படுத்தினர்.

அத்துடன் தமிழரசுக்கட்சியின் மாவட்ட கிளையைச் சேர்ந்த தலைவர் க.கனகசபாபதி, தி.குலநாயகம் ஆகியோர் சமுகமளித்து பலருக்கு உணவுப் பொதிகளை வழங்கினர். (ஸ்ரீ-3-52)

யாழ்.செய்திகள்

## யாழ்.பிரதேச கலாசார பேரவை நடத்தும் கலாசார விழா

(கொழும்புத்துறை)

யாழ்.பிரதேச கலாசாரப் பேரவை நடாத்தும் கலாசார விழா எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு யாழ்.பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் திருமதி சுலோஜினி குகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் சிறப்பு விருந்தினராக மேலதிக மாவட்டச் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சு.விஜயரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தேசிய கலை இலக்கியப் போட்டி 2009, 2010 இல் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதுடன் கிராமிய நடனம்,கும்மி நடனம், கவியரங்கம், பண்டார வன்னியன் நாட்டுக்கூத்து ஆகிய கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. [illegible]

## உரிய தகுதிகளை கொண்டிருந்தும் சேவையில் உள்ளீர்க்கப்படவில்லை

### நூலக பணியாளர்கள் ஆதங்கம்

(கொழும்புத்துறை)

வடமாகாணத்தில் அனைத்து பொது நூலகங்களிலும் நூலகர் தரப்பில் இல்லாத பணியாளர்கள் பலர் நூலக தரம்III இற்குரிய தகுதிகளை வைத்திருந்தும் உரிய பதவி நிலைக்கு சென்றடைவதற்கு வடமாகாண திணைக்களத்தினால் அழைப்புக்களோ [illegible] மேற்கொள்ளப்படவில்லை என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி சேவையாளர் சங்கத்தலைவர் பா.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நூலகர் சேவையை கற்கை நெறியாக பூர்த்தி செய்தும் நூலகங்களில் சேவையாற்ற காத்திருக்கும் பலர் தமது ஆதங்கத்தை தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் . (ஸ்ரீ-3-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களிற்கான கௌரவிப்பு விழா



**கீழ்வரிசை - இடமிருந்து வலம்:-**

துளசிகா மூர்த்தி- மாவட்டநிலை - 06 -181, தேனுஜா செபஸ்ரியான்குரூஸ்-173, சுவேதிகா ஜெயந்தன் -170, அருந்ததி சற்குணானந்தசர்மா -158, சாகிர்த்தியா கோணேஸ்வரன் -158, சங்கவி கந்தப்பு - 156, சுவிதா கர்ணன் - 156, நாராயணி கதிரமலை-155, தேவாஜினி புவனேந்திரன் - 155, கஸ்தூரி யகதீஸ்வரன்-153

**மேல்வரிசை- இடமிருந்து வலம்:-**

சிநேகா ஆனந்தன் - 146, தேனுஜா சண்முகலிங்கம் - 149, நிதுர்ஷா நகுலேஸ்வரன் - 149, ஜெயடக்ஷனா ஜெயராஜா - 151, பானுஜா பாஸ்கரன் - 150, கிருஷிகா அருள்வேந்தன் - 150,பிரியதர்ஷினி யோகநாதன் - 146, ஹரிணி மதனகுமார் - 154, கீர்த்தனா இரவீந்திரன் - 148, ரவிஷா ராம்குமார் - 146, கவிதாஞ்ஜி சந்திரகாந்தன் -152, விபீஷனி புவனேந்திரன் - 143, கவிஷனா இராஜேந்திரன் -146



தேசியமட்ட தமிழ்மொழித் தினம் -2009
பவித்திரா குமரகுருபரன்(இசையும் அசைவும்)
(1ஆம் இடம்- பிரிவு-1)



தேசியமட்ட தமிழ்மொழித் தினம் -2009
துளசிகா மூர்த்தி (ஆக்கத்திறன் வெளிப்பாடு)
(1ஆம் இடம்- பிரிவு-1)

**இவர்களுடன் பாடசாலை அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பிள்ளைகளின் அழியாத சொத்தான கல்வியையும் பண்புசார் விருத்தியையும் மேலோங்கச் செய்வதற்காக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வழிப்படுத்திய பாடசாலையின் அன்புக்கும், பெருமதிப்பிற்குமுரிய அதிபர் அவர்களையும் அறிவுசார் ஆசிரியர்களையும் சித்தியடைந்த 23 மாணவர்களையும் 100 புள்ளிகளிற்கு மேல் பெற்ற 53 மாணவர்களையும் அடைவுமட்டம் 70 இற்கு மேல் பெற்று பெருமை சேர்த்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**2010 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களும் 100 வீத அடைவு மட்டத்தைப் பெற்றுள்ளமை பாராட்டுக்குரியது.**

**பாடசாலை பழைய மாணவர் சங்கம்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**



2010 இல் நடைபெற்ற வாய்ப்பாடு மனனப் போட்டியில் மாகாணமட்டம் 2ஆம் இடம்
செல்வி.திலக்ஷனா பாலச்சந்திரன்



2010 இல் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டியில் மாகாணமட்டம் 2ஆம் இடம்
செல்வி.சுவேதிகா ஜெயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலையின் பரிசளிப்பு விழா நேற்று காலை இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் புதிய கணனி அறையின் நாடாவை யாழ். கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.வி. மகேந்திரன் வெட்டி திறந்து வைப்பதையும் பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சகாதேவன் தலைமையுரை ஆற்றுவதையும் திருமதி மாலதி சுப்பிரமணியம் மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# கல்முனையில் ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு-கல்முனை பிரதான நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் கட்டடத்திலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது. குறித்த சடலம் தூக்கிலிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கல்முனையைச் சேர்ந்த பிரேமதாச வயது 53 என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை மின்சார சபையின் கல்முனைப் பிரிவில் கடமையாற்றும் சிரேஷ்ட மின் அத்தியட்சகர் ஆவார்.

இது கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பில் கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

**உக்ரேன் -இலங்கை விமான சேவை**

உக்ரேனுக்கும் இலங்கைக்கும் இடையில் அடுத்த வருடம் முதல் விமான சேவைகளை நடத்துவது தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

**விசேட சிகிச்சையளிக்க தேசிய மத்திய நிலையம்**

செவிமடுத்தல் மற்றும் கதைப்பதில் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு விசேட சிகிச்சையளிக்க சகல வசதிகளும் கொண்ட தேசிய மத்திய நிலையம் ஒன்றை நாராஹேன்பிட்டியவில் அமைக்க அமைச்சரவைஅங்கீகாரம்வழங்கியது. தனியார் நிறுவனம் ஒன்றின் உதவியில் இதற்க்க மூன்று மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்படும். இதற்கான ஆரம்பச் செலவாக 120 மில் லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

**விமானங்களுக்கு எரிபொருள் வழங்கும் திட்டம்**

தெற்கில் மத்தல என்ற இடத்தில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேசவிமான நிலையத்துக்கு வரும் விமானங்களுக்கு எரிபொருள் வழங்கும் நிலையம் ஒன்றை வடிவமைப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியது.

**ஈரான்-இலங்கை வர்த்தக ஒப்பந்தம்**

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. கடந்த 2009 ஆம் ஆண்டில் இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் 992 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

**உயர்மட்டக்குழு**

இலங்கையில் போக்குவரத்து மற்றும் மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக இயற்கை வாயுவைப் பயன்படுத்தும் வகையில் நீண்ட கால அடிப்படையில் இயற்கை வாயுவைப் இறக்குமதி செய்வது தொடர்பான சாத்தியங்கள் பற்றி ஆராய உயர்மட்டக் குழு வொன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி சந்தைக்கு**

நெல் சந்தைப்படுத்தும் சபையால் 2009, 2010 ஆம்ஆண்டுகளில் பெரும்போகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 70 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை அரிசியாக சந்தைப் படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங் கியது.

**வவுனியாவுக்கு மூன்று மாடி வைத்தியசாலை**

வவுனியா-மன்னார் -முல்லைத்தீவு பிரதேச மக்கள் நன்மையடையும் வகையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு 220 கட்டில்கள் கொண்ட 8 நோயாளர் விடுதிகளை உள்ளடக்கிய மூன்று மாடிக்கட்டடம் ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இத்திட்டத்துக்கு இந்திய அரசாங்கம் 209 மில்லியன் ரூபாவை வழங்கும்.

**நகரில் சிறந்த சுகாதார வசதிகள்**

ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் 116. 63 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைப் பயன்படுத்தி கொழும்பு நகரில் மலசலக் கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகளை புனரமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. கொழும்பு நகரில் வாழும் மக்களுக்கு சிறந்த சுகாதார வசதிகளை வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

**வீதி அபிவிருத்திக்கு சீனாவின் உதவி**

இலங்கையில் உள்ள முக்கிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக சீனாவிடமிருந்து 259.8 அமெரிக்க டொலர்களை கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச்செய்து கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. சீனாவின் ஏற்றுமதி -இறக்குமதி வங்கி மூலம் இக்கடன் உதவி கிடைக்கவுள்ளது. இது தொடர்பில் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும்.

**அமைச்சரவை உபகுழு**

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் அனுகூலங்களை பொது மக்கள் அடைந்து கொள்ளும் வழி வகைகள்பற்றி ஆராய்ந்து உரிய பணிப்புரைகள் வழங்க அமைச்சரவையின் உப குழுவொன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (ஸ்ரீ-2)

# கடந்த காலங்களை விட தற்போது தான் தமிழ் மக்கள் அதிக துன்பங்களை அனுபவிக்கின்றனர்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் கடந்த காலங்களை விட தற்போது தான் அதிக துன்பங்களை அனுபவிப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

நடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அவசரகால மற்றும் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தை விட தற்போது தான் மக்கள் அதிகளவு துன்பங்களை எதிர்கொள்கின்றனர். 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் சிறைக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் வயோதிபர்கள் சிறையில் உள்ளனர். இவர்களை விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாடசாலைகள் இராணுவ ஸ்தலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இதனால் தமிழ்ச் சமூகத்தின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன. மேலும் சனல் 4 தொலைக் காட்சியில் பல தமிழ் யுவதிகள் நிர்வாணமாக கொலை செய்யப்பட்டுக் கிடைப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதுவே ஒரு சிங்கள சமூகத்தில் நடைபெற்றிருக்குமாயின் நீங்கள் பொறுத்துக் கொண்டு இருப்பீர்களா? தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசமான வட- கிழக்கில் அரசியல் தீர்வு இல்லாமல் மக்களின் பிரச்சினைகள் தீர்க்க முடியாது. மேலும் நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பினர் எதிர்க்கட்சிகளின் கருத்துக்கு ஆதரவு வழங்குவது இல்லை. சத்தம், கூச்சல் போட்டு சபை நடவடிக்கைகளைக் குழப்புகின்றனர். இது ஜனநாயகத்திற்குப் பொறுத்த மற்றதொரு செயலாகும் எனவும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)



யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 2011ற்கான இலவசப் பாடநூல் விநியோகம் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரிய வளநிலைய வளவாளர் இ.துஸ்யந்தன் உரையாற்றுவதையும் அருகில் கந்தர்மட இராணுவமுகாம் படையதிகாரி பி.என்.சோமசிறி மற்றும் ஏனைய அதிகாரிகள் இருப்பதை படத்தில் காணலாம்.

# லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமானது இலங்கைக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையே

## பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

லண்டனில் நடைபெற்ற ஜனாதிபதிக் கெதிரான ஆர்ப்பாட்டம் இலங்கைக்கு விடுக்கப்பட்ட முறையான எச்சரிக்கை என்று சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பான சிரேஷ்ட பேராசிரியர் ரொஹான் குணரட்ன அரசாங்கத்திற் சுட்டிக்காட்டுகின்றார்.

எனவே புலிகளின் பிரசாரங்களை முறியடிப்பதற்கு கடந்த காலங்களிலும் பார்க்க முனைப்புடன் வெளிவிவகார அமைச்சு செயற்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகின்றார்.

அதற்கென பிரசாரம் மற்றும் தொடர் பாடல் வழிமுறைகள் மேம்படுத்தப் பட வேண்டிய தன் அவசியம் குறித்தும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

அது மாத்திரமன்றி வெளிநாடுகளில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களை புலிகளின் ஆர்ப்பாட்டங்கள் அல்லது புலி ஆதரவாளர்களின் ஆர்ப்பாட்டங்களாக சித்தரிப்பதன் மூலமே அவற்றுக்கெதிரான வெளிநாட்டு ஆதரவைத்திரட்ட முடியும் என்பதாகவும் அவர் இலங்கை அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கினந் தீர்க்கும் விநாயகனை போற்றி வழிபடும் விநாயகர் ஷஷ்டி விரதம்

எக்காரியத்திலும் முதல் வணக்கத்திற்குரியவராகிய விநாயகப்பெருமானின் சிறப்பான விரதமாக விநாயக ஷஷ்டிப் பெருங்கதை வழிபாடு அனுஷ்டிக்கப்படுகின்றது. கார்த்திகை மாதத் தேய்பிறை முதல் நாளில் தொடங்கி மார்கழி மாதத்து வளர்பிறை ஆறாம் நாளான ஷஷ்டித்திதிவரை இருபத்தொரு நாட்கள் விரதமிருந்து பெருங்கதை எனப்படும் பிள்ளையார்கதை படித்து வேண்

## இன்று விநாயகர் ஷஷ்டி விரதம்

டிய வரங்களைப்பெறும் சிறப்பான விரத நாட்களாக விநாயக ஷஷ்டி விரதம் சைவ மக்களால் அனுட்டிக்கப்படுகின்றது.

அடியார்களுக்கு ஏற்படும் விக்கினங்களைப் போக்கும் விக்கினேஸ்வரராகிய விநாயகப்பெருமான் முதல் வழிபாட்டிற்குரிய, பெரு மைக்குரிய பெருங்கடவுளாக இருப்பதால் அவர் கதையும் பெருங்கதையெனப் போற்றிப் படித்து இவ்விரத நாட்களில் வழிபாடுகள் நடாத்தப்படுவது சிறப்பாகும்.

விநாயக ஷஷ்டி விரதத்தினைப் பெருங்கதை விரதம் எனவும் மக்கள் கொண்டாடுவார்கள். மக்களுக்கு நல்ல அறநெறிகள் கூறும் புராண வரலாறுகள் பெருங்கதையில் எடுத்துக் கூறப்படுகின்றன. விநாயக விரத பலனாலேயே பகீரத மன்னன் கங்கை நதியைப் பூலோகத்திற்கு வரவழைத்ததாகவும், நளமகாராசா தமயந்தியை மீண்டும் அடைத்ததாகவும், சீதாபிராட்டியைப் பிரிந்த இராமன் மீண்டும் இணைந்ததாகவும், முப்புரங்களைத் தகனம் செய்வதற்குச் சிவபெருமானுக்கு ஆதாரமாக இருந்ததாகவும், அகலிகை சாப விமோசனம் பெற்றதாகவும், பெருங்கதை எடுத்துக் கூறுவதுடன் பொய் பேசுவது பெரும் பாவம் என்பதையும் நன்கு உணர்த்துவதாகவுள்ளது.

பெருங்கதையாகிய விநாயக ஷஷ்டி விரதத்தை இடை நடுவில் விடுவதும், சிரத்தையில்லாது தொடர்வதும் பல்வேறு இன்னல்களையும் தரும் என்பதனை இலக்கண சுந்தரி எனும் மகாராணி இவ் விரதத்தை ஒழுங்காக கைக்கொள்ளாததால் அரண்மையில் பல துன்பங்களுக்கு ஆளானதாகவும் மகாராணியையும் மனையிலிருந்து வெளியேற்றியதாகவும், அடுத்தடுத்து ஏற்பட்ட துன்பங்களால் இலக்கண சுந்தரி மீண்டும் கையில் காப்புக்கட்டி விரதம் அனுட்டித்து இழந்தவற்றையெல்லாம் பெற்று நல்வாழ்வு கண்டதாகவும் நல்லறிவுரையாக பெருங்கதை



எடுத்துக் கூறியுள்ளது.

விநாயகஷஷ்டி விரத வரலாற்றிலே சிவ பெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்த கஜமுகாசுரன் என்னும் அசுரன், தன் தவவலிமையால் இறைவனிடம் சிவபிரானாலோ அன்றி வேறு சக்திகளாலோ தனக்கு அழிவு ஏற்படக் கூடாதென வரம்கேட்டான். இறைவனிடம் வரமும்பெற்று, அந்த வரத்தின் வலிமையால் தேவர்களையும், முனிவர்களையும் அடக்கி ஒடுக்கி இம்சைப்படுத்தினான். இதனாற் துன்புற்ற பிரமா, விஷ்ணு. இந்திரனாதி தேவர்கள் எம்பெருமானிடம் முறையிட்டுப் பணிந்தனர். தேவர்களின் வேண்டுதல்கட்கு இரங்கிய சிவபெருமான் யானைத் தலையும் மனித உடம்பும் கொண்ட புதியதொரு வடிவங் கொண்டவராக கஜமுகாசுரனைத் தோற்றுவித்தார். விநாயகப்பெருமான் அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலை நாட்டவும் தேவர்களைப் பாதுகாக்கவும் திருவுளம் கொண்டவராக கஜமுகாசூரான அசுரனைக்கொன்று விநாய ஷஷ்டி நன்நாளிலே தர்மம் தலைக் காக்க வழிவகுத்தார்.

அழிவிலாவரம் பெற்ற கஜமுகாசூரன் பெருச்சாளி வடிவங்கொண்டு விநாயகப் பெருமானின் திருவடிகளிற் சரணடைந்தான் விநாயகப்பெருமான் அவனது அசுர குணங்களைப் போக்கித் தனது வாகனமாக்கிக் கொண்டார்.

பெருமைக்கும் சிறப்பிற்குமுரிய முதற் கடவுளாகிய விநாயகப்பெருமானை விநாயக ஷஷ்டி நன் நாட்களிலே விரதம் அனுஷ்டித்து நாமும் நற்பேறுகளைப் பெறுவோமாக.

**நீர்வை மணி**

## இந்தியக் கடற்படைத்தளபதி இலங்கைக்கு விஜயம்

இந்திய கடற்படை இராணுவத்தலைமை தளபதி நிர்மல் வர்மா 4 நாட்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந் துள்ளார்.

இலங்கை கடற்படையின் 60 ஆவது நினைவு தின நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் கடலோர பாதுகாப்பு குறித்த பேச்சு வார்த்தைகளை நடத்துவதும் அவரது விஜயத்தின் நோக்கம் என தெரிவிக்கப்படு கிறது. அவருடன் மேலும் பல முக்கிய அதிகா ரிகளும் கொழும்பு வரவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ-2)

## தமிழ்மொழியின் தொன்மை பெருமைகளை உணர்ந்து ஆசிரியர்கள் செயற்படவேண்டும்

### வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மொழியாகிய தமிழ்மொழியின் பெருமைகளை ஆசிரியர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் மொழி தொடர்பான ஆற்றல்களை மேம்படுத்த முடியும் என வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தால் நடத்தப்பட்ட முத்தமிழ் விழா கடந்த 7ஆம் திகதி நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆசிரியர்கள் தமது பயிற்சிக் காலத்தில் உயர் வாண்மையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். வாண்மைத்துவ வளர்ச்சிக்கு இத்தகைய விழாக்கள் உந்து சக்தியாக அமையும். இவற்றைப் பாடசாலை மாணவர்க ளுக்கு உரிய முறையில் பிரயோகம் செய்ய வேண்டும்.

ஆசிரியர்கள் தம் தமிழியல் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு தமிழ் தொடர்பான விழாக்கள் பேருதவி புரிகின்றன. இவ்வா றான விழாக்களின் மூலம் தமிழ்மொழி மேலும் வளர்ச்சி பெறுகிறது.

மொழியின் தொன்மை பற்றியும் அதன் இலக்கிய வளம்பற்றியும் மாணவர்கள் அறிந்து கொண்டால் மொழி குறித்த நேசிப்பு இயல்பாகவே உருவாகும். இதனால் மொழிப் பாடத்தின் சித்தி வீதமும் அதிகரிக்கும்.

மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்று. அந்த வகையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பங்களிப்பு போற்றுதலுக்குரியது. அதுமட்டுமின்றி ஆசிரிய கலாசாலையில் தற்போது இயல்பு நிலை ஏற்பட்டுள்ளதோடு இத்தகைய விழாக்கள் நடப்பது மனமகிழ்ச்சி தருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ -2-6)

## லண்டனில் நடந்த விவகாரம் ஊடகங்களுக்கு எப்படித் தெரியும்?

### விரிவான விசாரணைகளுக்கு உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 2ஆம் திகதி லண்டனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தில் நடத்திய கூட்டத்தில் இடம்பெற்ற விவகாரங்கள் குறித்த செய்திகள் ஊடகங்களுக்கு கசிந்தமை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விரிவான விசாரணைகளுக்கு உத்தர விட்டுள்ளார்.

பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் நிஹால் ஜெயசிங்க கம்போடியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள வேளையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபுக்ஷ இவ் விவகாரம் தொடர்பிலான விரிவான விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இவ்விசாரணைகளை பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதரகத்துடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்ற படை உயரதிகாரிகள் ஒருவர் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ஸ்ரீ)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணம் வழங்கக் கோரிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையை யடுத்து அன்றாடம் தொழில் செய்து சீவிக்கும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் போதிய வருமானம் இன்றி தமது குடும்பவாழ்க்கையை நடத்த முடியாமல் இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் கடந்த 2 வாரங்களுக்கு மேலாக மழை பெய்து வரும் நிலையில் குழந்தைகளுடன் வாழும் குடும்பங்கள் போதிய ஆகாரம் இன்றி பட்டினி நிலையில் வாழ்வதாக தெரி விக்கப்படுகிறது.

அதேவேளை கரையோரப் பகுதிகளில் வாழும் மீனவக் குடும்பங்களும் தமது தொழிலை இழந்து வருவாய் இன்றி இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் தாழ்ந்த நிலப்பகுதிகளில் மழைவெள்ளம் பெருமளவில் உட் புகுந்துள்ளதால் அம்மக்கள் சமைத்து உண்ணமுடியாமல் படுக்கவோ, இருக்கவோ முடியாமல் அவதியுறுகின்றனர்.

எனவே இவ்வாறான குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் மற்றும் சமைத்த உணவு என்பவற்றை வழங்குமாறு பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-3-10)

## முள்ளுக்கரண்டி தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் காயம்

சிகிரியாவிலுள்ள விடுதியொன்றில் நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட கைகலப்பில் சுற்றுலாப் பயணிகள் இருவர் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளால் கேட்கப்பட்ட உணவை குறித்த விடுதியில் உணவு பரிமாறுபவர் வழங்கத் தவறியதையடுத்து சுற்றுலாப் பயணிகள் நால்வருக்கும் உணவு பரிமாறுபவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் கைகலப்பில் முடிந்துள்ளது.

சுற்றுலாப் பயணியொருவர் குறித்த விடுதியில் உணவு பரிமாறுபவரை முள்ளுக் கரண்டியால் தாக்கிய போது அவரும் சுற்றுலாப் பயணிகள் மீது கரண்டியால் பதில் தாக்குதல் நடத்தினார்.

இது தொடர்பில் இரு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

சுத்தமும் சுகாதாரமுமான பயிர்ச் செய்கை வாழையை வாழவைக்கும். அதனால் எம்மையும் அது வாழ்வாங்கு வாழவைக்கும். வாழையடி வாழையாக எமது குலம் தழைத்தோங்க மேற்குறிப்பிட்ட அனைத்துமே அவசியம். சுத்தமும் சுகாதாரமும் எதற்கும் அவசியம். அதுவே வாழைச் செய்கைக்கும் பொருந்தும்.

**வாழைக்கும் இடைவெளி தேவை**

எங்களூர் பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைகளுள் பல சிறந்தனவாக விளங்குவது எங்களது பயிர்ச்செய்கையின் தாற்பரியத்தை எடுத்துக்காட்டும் செயலாகும். முன்னோர்களால் செய்து பார்க்கப்பட்டு அதனது பயன்களை இனங்கண்டு எமக்கு பயனுள்ள மொழிகளாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக எந்தவொரு பயிர்ச்செய்கையிலும் பயிர்களுக்கிடையிலான இடைவெளி ஒரு முக்கியமான அம்சமாகும். இன்னொரு பக்கத்தில் பார்த்தோமானால் இவ்வாறான இடைவெளி வீடு கட்டுவதிலும், குறிப்பாக கிணறு மற்றும் மலசலகூடம் என்பனவற்றை அமைத்து தகவலைத் திரட்டி இறுதியில் அமைப்பதிலும் கவனத்திற்கொள்ளப்படுகின்றது: பயிர் இடைவெளியை எவ்வளவு அழகாக இப்படிக் கூறியிருக்கிறார்கள்.

*நெல்லுக்கு நண்டோட*
*வாழைக்கு வண்டிலோட*
*தென்னைக்கு தேரோட*

அன்றைய காலத்திலிருந்து நெல், வாழை மற்றும் தென்னை ஆகியனவற்றுக்கிடையிலான பயிர் இடைவெளியை நண்டையும், வண்டிலையும், தேரையும் வைத்து அவற்றின் குறுக்களவை அளவுகோலாக வைத்தியம்பிய கைங்கரியத்தை வியந்து பார்க்க வேண்டியுள்ளது. விஞ்ஞானத்தை வைத்து அலசி ஆராய்ந்து அதிலொரு பகுப்பாய்வு செய்து அதற்கொரு வடிவமைப்பும் முன்னோர் செய்ததை நிரூபிப்பதாகவே பொதுவாக எமது ஆய்வுகள் அமைந்துவிடுகின்றன.


இந்த சூத்திரத்திலிருந்து வெளியே வந்து முன்னோர் கூறிய பழுத்த மொழிகளை அடிஅத்திவாரமாக வைத்து புதியனவற்றை கண்டுபிடித்திட ஆய்வாளர்கள உலகம் முயன்றிட வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்து பயிர்ச்செய்கையின் போது மிக முக்கியமாக பயிர் இடைவெளியை அவசியம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

பயிர் இடைவெளி என்பது இங்கே ஒரு பயிருக்கு அல்லது ஒரு நிலையத்தில் (Hill) உள்ள பயிருக்கு தேவையான நிலப்பரப்பு எனலாம். இந்த இடைவெளி பயிருக்கு தேவையான நிலப்பரப்பு எனலாம். இந்த இடைவெளி பயிருக்கு தேவையான ஒளி, நீர், மண் மற்றும் நுண்ணூட்டச் சத்து என்பன கிடைப்பதற்கான மிகக் குறைந்த இடமாகும். இந்த இடைவெளி சிறுத்தால் பயிர்களுக்கிடையிலேயே போட்டி ஏற்பட்டுவிடும். இதனால் இருபயிருமே பாதிக்கப்பட்டுவிடும்.

13-II

அதேபோல இடைவெளி பெருத்தால் அந்த விளைநிலத்திலிருந்து எமக்கு தேவையான விளைச்சலை பெறமுடியாது. அதனையும் விட வெறுமையான இடைவெளியைப் பயன்படுத்தி களைகள் பெருக வாய்ப்பாகிவிடும். பயிர் இடைவெளியை அந்தந்த பயிர் இனத்திற்கு ஏற்றவாறு ஒதுக்கிவைத்தல் மிக மிக அவசியமானதாகும்.

பயிர் இடைவெளிகளை அதனது ஒழுங்கு முறைப்படி அமைத்தால் பீடைப் பெருக்கத்தையும் கட்டுப்படுத்தமுடியும். எமது முன்னோர்கள் காலத்தின் கண்ணாடியாகி அனுபவித்து தமது அனுபவத்தை சொல்லாக்கி வைத்துள்ளனர். இவற்றை ஒழுங்காக அவதானித்தால் அதிலிருந்து பல நல்ல செய்திகள் எமக்கு பயனுள்ளதாக இருப்பதை அறிந்து கொள்ளலாம்.



எதிலும் எங்களூர் பாரம்பரிய முறைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கு தேவையான விஞ்ஞான விளக்கங்களுடன் புதியனவற்றையும் இணைத்து எங்களூர் விவசாயத்தை கட்டியெழுப்பவேண்டிய பணி எங்கள் முன் இருக்கின்றதென்பதை நாமுணர்ந்து நாமே வழிகாட்டியாக முன்னின்று செயற்பட வேண்டும் என எழுதும் இக்கைகள் துடிக்கின்றன.

வாருங்கள்! இன்னும் இதுபற்றி அலசி ஆராயலாம். (தொடரும்)

# புதிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் NVQ தர தேசிய அரச அங்கீகார சான்றிதழ்களை வழங்கிய இலங்கை கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையில் புதிய கற்கைநெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில் கணனி மென்பொருள், கணனி வன்பொருள், உந்துருளி திருத்துதல், முச்சக்கரவண்டி திருத்துகை, ஆடை வடிவமைப்பு, அழகுக்கலை, பற்றவைத்தல் (வெல்டிங்), கட்டட நிர்மாணம், மரவேலைப் பொறியியல், வீட்டு மின்னிணைப்பு, அலுமினியம் பொருத்துகை, வெளியிணைப்பு இயந்திரம் திருத்துகை, நீர்க்குழாய் பொருத்துதல் ஆகிய கற்கைநெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

6 மாத காலத்தைக் கொண்ட இக்கற்கை நெறிகள் தீவகம் உட்பட யாழ்.மாவட்டத்தில் பல பாகங்களிலும் நடைபெறவுள்ளன.

இதில் இணைய விரும்புவோர் தமது பெயர் விபரங்கள், கல்வித் தகைமைகள் உள்ளடங்கிய சுயவிபரக்கோவையை தயாரித்து எதிர்வரும் 17 ஆம் திகதி கிடைக்கக் கூடியவாறு இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபை, 375, கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் சமுகம் தருமாறு மாவட்ட திட்டமிடல் இணைப்பாளர் இரா.அகிலன் கோரியுள்ளார். (ஸ்ரீ-4)

# பருவ கால மழையையடுத்து ஏ-9 வீதி சேதமடைந்துள்ளது

## போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமம்

(இளவாலை)

யாழ்- கொழும்பு பஸ் சேவையானது தினமும் நேர ஒழுங்கின்றி இயங்கி வருவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதோடு தமது கடமைகளை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாது அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கோண்டாவில் யாழ். சாலை பொது முகாமையாளரிடம் கேட்ட போது, பருவகால மழையினால் ஏ-9 பாதை சீரற்றுக் காணப்படுவதோடு பெரும்பாலான இடங்கள் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன.

இதனால் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்வதோடு கால தாமதமும் ஏற்படுகிறது.

இதன் காரணமாகவே இப் பிரச்சினை நிலவுவதாக அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3-32)







M.Chems நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை இராணுவத்தின் 52ஆவது படைப்பிரிவின் ஒழுங்கமைப்புடன் நேற்று முன்தினம் விவசாயிகளுக்கான பயிற்சிப் பட்டறை தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விவசாயிகளுக்கான உபகரணங்களை M.Chems நிறுவனப் பணிப்பாளர் நாரந்த கமகே, கேணல் சுனிந்த ரணசிங்க ஆகியோர் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விவசாயிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் பெற்றும் வேலையின்றி அலையும் யாழ்ப்பாண இளைஞர், யுவதிகள்!

## விஜயகலா எம்.பி. வலியுறுத்தல்

(கொழும்பு)

படித்துப் பட்டம்பெற்ற ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி அலைந்து திரியும் நிலை குடாநாட்டில் ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று தேர்தல் காலங்களில் பலரும் வாக் குறுதி அளித்திருந்த போதிலும் அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சபையில் கோரிக்கை விடுத்தார்.



வரவு -செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது,

வடக்குக்கிழக்கில் அழியாத செல்வமான கல்வி யுத்தத்தினால் அழிவடைந்துள்ளது. இப் பகுதிகளில் பட்டம் பெற்ற ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் மாத்திரம் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலை எதுவும் கிடைக்காத நிலையில் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று தேர்தல் காலங்களில் பலரும் வாக்குறுதி அளித்த போதிலும் இதுவரை அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

எனவே மிகுந்த கஷ்டங்களின் மத்தியில் பட்டதாரிகளாக மாறியுள்ள வடக்கு, கிழக்கு இளைஞர், யுவதிகளுக்கு உரிய வேலை வாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. இவற்றை நீக்குவதற்கும் உயர் கல்வி அமைச்சர் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம் இராமநாதன் இசை நடனக் கல்லூரியினை யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பீடமாக மாற்றுவதற்கு உயர் கல்வி அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார். எனது கோரிக்கையினை ஏற்று இதற்கான இணக்கத்தைத் தெரிவித்த அமைச்சர் எஸ்.பி.திசா நாயக்கவுக்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இராம நாதன் இசை நடனக்கல்லூரியினை பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பீடமாக மாற்றுவதற்கு அமைச்சர் துரித நடவடிக்கை எடுப்பார் என நான் நம்புகின்றேன் என்றார். (ச-5)

## ஓய்வூதியக்கொடுப்பனவு

2011ம் ஆண்டுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு பற்றிய திகதிகள் ஓய்வூதிய திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் தைமாதம் 10ஆம் திகதி திங்கட்கிழமையும் மாசிமாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமையும் பங்குனிமாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமையும் சித்திரைமாதம் 7ஆம் திகதி வியாழக்கிழமையும், வைகாசிமாதம் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் ஆனிமாதம் 9ஆம் திகதி வியாழக்கிழமையும், ஆடிமாதம் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் ஆவணி மாதம் 11ம் திகதி வியா ழக்கிழமையும், புரட்டாதிமாதம் 8ஆம் திகதி வியாழக்கிழமையும் ஐப்பசி மாதம் 6ஆம் திகதி வியாழக்கிழமையும் கார்த்திகை மாதம் 9ஆம் திகதி புதன்கிழமையும் மார்கழி மாதம் 8ஆம் திகதி வியாழக்கிழமையும் ஆகிய தினங்களில் அடுத்த வருடத்தில் இருந்து ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

(ஸ்ரீ-3-10)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்




✠1282- வேல்சின் கடைசி பழங்குடி இளவரசர் கடைசி லெவெலின் கொல்லப்பட்டான்.

✠1789- ஐக்கிய அமெரிக்காவின் மிகப் பழமையான பொதுப் பல்கலைக்கழகம் வடகரொலைனா பல்கலைக்கழகம் (சாப்பல் ஹில்) அமைக்கப்பட்டது.

✠1792- பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னன் நாட்டுத் துரோகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டான்.

✠1816- இந்தியானா ஐக்கிய அமெரிக்காவின் 19வது மாநிலமானது.

✠1907- நியூசிலாந்தின் நாடாளுமன்றக் கட்டடம் தீயில் எரிந்து சாம்பலானது.

✠1917- பிரித்தானியப் படைகள் ஓட்டோமான் பேரரசிடம் இருந்து ஜெருசலேமை மீட்டன.

✠1927- சீனாவின் குவாங்சூ நகரை கம்யூனிஸ்டுகள் கைப்பற்றி அதனை குவாங்சூசோவியத் என மாற்றியிருப்பதாக அறிவித்தனர்.

✠1931- அவுஸ்திரேலியா,கனடா, அயர்லாந்து, நியூசிலாந்து மற்றும் தென்னா பிரிக்கா ஆகியவற்றுக்கு தமது முழுமையான அரசியலமைப்புகளைப் பேணும் சட்டமூலம் வெஸ்ட் மின்ஸ்டர் சட்டம் 1931 பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

✠1936- ஐக்கிய இராச்சியத்தின் மன்னன் எட்டாம் எட்வேர்ட் முடி துறந்தான்.

✠1937- எஸ்தோனியாத் தலைவர் ஜான் ஆன்வெல்ட் ஸ்டாலின் ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

✠1941- இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியும் இத்தாலியும் ஐக்கிய அமெரிக்கா மீது போரை அறிவித்தன.

✠1946- ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெப்) நிறுவனம் அமைக்கப்பட்டது.

✠1958- அப்பர் வோல்ட்டா பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

✠1964- நியூயோர்க் நகரில் ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் சே.குவேரா உரையாற்றினார். இவர் உரை யாற்றிக் கொண்டிருந்தபோது ஐ.நா கட்டடத்தின் மீது குண்டுத் தாக்குதல் இடம் பெற்றது.

✠1972- அப்பலோ-17 சந்திரனில் இறங்கியது.

✠1981- எல் .சல்வடோரில் இராணுவத்தினர் நாட்டின் உள்நாட்டுப் போரின் ஒரு கட்டமாக கிட்டத்தட்ட 900 பொது மக்களைக் கொன்றனர்.

✠1993- மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் உயர்மாடிக் கட்டடம் ஒன்று வீழ்ந்ததில் 48பேர் கொல்லப்பட்டனர்.

✠1994- ரஷ்யாவின் ஜனாதிபதி போரிஸ் யெல்ட் சின் தமது படைகளைச் செச்சினியாவுக்கு அனுப்பினார்.

✠1998- தாய்லாந்தைச் சேர்ந்த விமானம் வீழ்ந்ததில் 101 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

✠1781- சர் டேவிட் ப்ரூஸ்டர்,ஸ்காட்லாந்து இயற்பியலாளர் (இ.1868)

✠1803- ஹெக்டர் பேர்லியோஸ், பிரெஞ்சு இசையமைப்பாளர் (இ.1869)

✠1843- ரொபர்ட் கோக், ஜெர்மனிய அறிவியலாளரும் மருத்துவரும் (இ.1910)

✠1882- மாக்ஸ் போர்ன், ஜெர்மனிய இயற்றியலாளரும், நோபல் விருதாளரும். (இ.1970)

✠1990- மார்க் டோபே, அமெரிக்கப் பண்பியல் வெளிப்பாட்டிய ஓவியர் (இ.1976)

✠1911- நகிப் மஹ்ஃபூஸ், நோபல் பரிசு பெற்ற எகிப்தியப் எழுத்தாளர் (இ.2006)

✠1918- அலெக்சாண்டர் சோல்செனிட்சின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் (இ.2008)

✠1931- ஓஷோ,இந்திய ஆன்மீகத் தலைவர். (இ.1990)

✠1935- பிரணாப் முகர்ஜி, இந்திய அரசியல்வாதி

✠1951- பீட்டர் டி.டேனியல்ஸ், மொழியியல் அறிஞர்.

✠1969- விஸ்வநாதன் ஆனந்த்,இந்திய சதுரங்க ஆட்டக்காரர்.

### இறப்புகள்

✠1937- ஜான் ஆன்வெல்ட், எஸ்தோனியாவின் தலைவர் (பி.1884)

✠2004- எம்.எஸ்.சுப்புலட்சுமி,கர்நாடக இசைக் கலைஞர் (பி.1916)

1882 -மகாகவி சுப்பிரமணியபாரதியார் பிறந்த தினம் (இ.1921)



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள்



நாட்டில் பெய்த தொடர் மழையினால் பாடசாலையில் தஞ்சமடைந்துள்ள கிளிநொச்சி பன்னங்கண்டி கிராம மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப் பொருட்களை சுவிஸ் சிவன்கோவில் சைவத் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் *மண்சுமந்த மேனியர்* அமைப்பின் இணைப்பாளர் வழங்கியுள்ளார்.

இந் நிகழ்வு அண்மையில் பிற்பகல் முரசு மோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் இடம் பெற்றுள்ளது. இது குறித்து மேலும் தெரிய வருவது,

மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் சுவிஸ் நாட்டின் சைவத்தமிழ் சங்கம் ஒரு இலட்சம் ரூபாவைத் திரட்டி அனுப்பியுள்ளது.

இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ் உதவி வழங்கப்பட்டது.

ஆயினும் முன் அனுமதியின்றி அத்தியாவசியப் பொருட்கள் வழங்க முடியாது என பாதுகாப்புப்படையினர் தெரிவித்ததாகவும் இதை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிறேமச்சந்திரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஆகியோர் நிலமையை விளக்கியமையால் இப்பொருட்கள் வழங்க அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(பநி-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலயத்தின் அறப் பணியைப் பாராட்டி "சைவச்சுடர் நிலையம்"எனும் சிறப்பு விருதும் பொற்கிழியாக ரூபா மூவாயிரமும் திருவாவடுதுறை ஆதீன குரு மகா சந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகளால் சபையின் முன்னாள் பொருளாளரும் இந்நாள் உப தலைவருமான க.கு.க. சிவபாலனுக்கு வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# அடுத்த ஆண்டு முதல் சுகாதாரப் பரிந்துரையுடனான பாடசாலை பாடநூல் பை அறிமுகப்படுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

கல்வி அமைச்சு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகம் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகம் என்பன ஒன்றிணைந்து 2011 ஆம் ஆண்டிலிருந்து சுகாதாரப் பரிந்துரையுடனான பாடசாலைப் பாடநூல் பை ஒன்றைச் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன.

தற்போது பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துகின்ற பாடநூல் பைகள் சுகாதார ரீதியாக பொருத்தமான தரத்தில் காணப்படாமை, சரியான முறையில் பயன்படுத்தாமை மற்றும் சுமக்க முடியாதளவு பாரமாயிருத்தல் போன்றவற்றால் பாடசாலை மாணவர்கள் பல சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

தசைகளிலும் மூட்டுகளிலும் வலி உண்டாதல், விரைவாகக் களைப்படைதல், முள்ளந்தண்டில் வளைவு ஏற்படல், தோள்கள் கீழ் நோக்கி வளைதல், விபத்து களுக்குள்ளாகுதல், உளப் பிரச்சினைகளுக்குள்ளாகுதல், உடலின் வெவ்வேறு இடங்களில் விறைப்பு மற்றும் பல சிரமங்கள் ஏற்படல் போன்ற பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதே இப்பாடசாலைப் பையை அறிமுகப்படுத்துவதன் பிரதான நோக்கமாகும். சுகாதாரப் பரிந்துரையுடனான பாடசாலைப் பாடநூல் பை பின்வருமாறு அமையும்.

பாடசாலைப் பையின் வடிவம் நீள் சதுரமாக இருப்பதோடு மூலைகள் வளைவாக இருத்தல், பையானது இரு வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருத்தல், உணவுப் பொதி மற்றும் தண்ணீர்ப் போத்தல்களை வைக்கச் சரியான இடங்கள் ஒதுக்கப்பட்டிருத்தல், இடுப்புப் பட்டி மற்றும் தோற்பட்டிகளுடையதாக இருத்தல், சர்வதேச தரத்திற்கமைய சாதாரணமாக மாணவர் ஒருவர் சுமக்கக் கூடிய சுமை தமது உடல் நிறையின் பத்து வீதமாகும். இது பதினைந்து வீதத்தை மீறக் கூடாது.

ஆகையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆரோக் கியமான பாடசாலைப் பாடநூல் பையைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்கு மாணவர்களைப் பழக்கப்படுத்துவதன் மூலமாக பாரங்கூடிய பையின் காரணமாக அவர்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ளக் கூடிய வாய்ப்பு கிட்டியுள்ளது. (ஸ்ரீ-3-19)

# அமெ.சிலோன் மிசன் திருச்சபையால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

அமெரிக்க சிலோன் மிஷனின் தாய்ச் சங்கத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அமெரிக்க சிலோன் மிஷன் திருச்சபையால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரை, சித்திரப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்கள் மற்றும் ஆறுதல் பரிசுகள் பெறுவோரின் விபரம் வருமாறு,

**கட்டுரைப்போட்டி ( கனிஸ்ட பிரிவு)**

வி. திவாகரன் (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), கி. நிஷானி ஜெயராஜசிங்கம் (சி.ஏ.சி.எம்.தேவாலயம், நவாலி), வி.பொறின் சுமநந்தினி (சாளம்பைக்குளம், வுவுனியா)

**ஆறுதல் பரிசுகள்**

ஸ்ரீ.விஷ்ணுகா (யா/ விக்ரோறியாக் கல்லூரி), செ.சேந்தன் (கண்டிவீதி, சாவகச்சேரி),றொ. ஜெனிபர்ட்(யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி)

**(சிரேஷ்ட பிரிவு)**

ம. செல்வநேசன் சுதர்ஸன் (சி.ஏ.சி.எம். தேவாலயம், நவாலி),

செ.சுதர்மினா (3ஆவது மைக்கல், திருகோணமலை), செ.ஜெயந்தி(யா/யாழ்ப்பாணக் கல்லூரி)

**ஆறுதல் பரிசுகள்**

ஜோ.விஜயர்தர்சன் (கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, சுன்னாகம்),தே. ஸ்ரெல்லா சிந்தியா(சி.ஏ.சி.எம். தேவாலயம், சாவகச்சேரி), ந.துஷாந்தி (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),

**சித்திரப்போட்டி (கனிஷ்ட பிரிவு)**

மு.ஜனனி (பிறவுண்றோட், கொக்குவில் கிழக்கு), சு.உஷாந்தினி (3ஆவது மைல்கல், திருகோணமலை), செந்தூர்க்குமரன் (கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, சுன்னாகம்

**ஆறுதல் பரிசுகள்**

நா.தீபிகா, ருஷாந்தினி, ச.புனிதமாதா (3ஆவது மைல்கல், திருகோணமலை)

**(சிரேஷ்ட பிரிவு)**

செ.ஜெகன் (கற்பகப் பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு) , செ.சுதர்மினா (3ஆவது மைல்கல், திருகோணமலை), ச.சர்மிலா (வடலியடைப்பு,பண்டத்தரிப்பு)

**ஆறுதல்பரிசு**

வை.சாகுந்தன் (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)

இவர்களுக்கான பரிசில்கள் மருதனார் மடம், கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமையன்று நடைபெறும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ)

# டுபாய் நிறுவனமொன்றில் சம்பளப் பணத்தை களவாடிய இலங்கையர் கைதானார்

(கொழும்பு)

டுபாய் நிறுவனமொன்றில் சம்பளப் பணத்தை களவாடிச் சென்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றி வந்த நபர் ஒருவர் இவ்வாறு சம்பளப் பணத்தை களவாடிச் சென்றுள்ளார்.

சம்பளம் செலுத்துவதற்காக வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட 67ஆயிரத்து100 திர்ஹாம் பணத்தை இவ்வாறு களவாடியுள்ளார்.

சம்பளப் பணத்தை களவாடியதாக ஒப்புக்கொண்ட குறித்த நபரின் கைவிரல் அடையாளப் பதிவு நீர் கொழும்பு நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலி பலப்பிட்டிய பிரதேசத்தைச்சேர்ந்த முஹமட் கதீர் முஹமட் இலியாஸ் என்பவரே இவ்வாறு குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட போது குறித்த நபரிடம் 25ஆயிரத்து400 திர்ஹாம் காணப்பட்டதாகவும் , ஏனைய பணத்தை டுபாயில் இருக்கும் தமது காதலிக்கு வழங்கியுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.திவுலப்பிட்டியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கே இவ்வாறு பணம் வழங்கப்பட்டுள்ளது.

தமது காதலிக்கு 40 ஆயிரம் திர்ஹாம் பணத்தை வழங்கியதாக விசாரணைகளின் போது சந்தேகநபர் ஒப்புக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பொன்விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கட்டுவன் குளம் மகா வித்தியாலயத்தின் பொன் விழா நூல் வெளியீடு இன்று காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் க. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் மாலைநேர நிகழ்வுகளாக பரிசளிப்பு விழாவும் நுழைவாயிலின் பெயர்ப்பலகை திரை நீக்கமும் செய்யப்படும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் க. சுரேஸ் பிறேமச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (ச-7)

# உடல் இரண்டு, இதயம் ஒன்று

(பனாமா)

காதல் விவகாரம் என்று நினைத்து விடாதீர்கள். இது உடல் ஒட்டி பிறந்த இரட்டை குழந்தைகள் பற்றியது.

பனாமாவில் கடந்த 4 ஆம் திகதி குழந்தைகள் மருத்துவமனை யில் உடல் ஒட்டிய நிலையில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன.

இந்த குழந்தைகளுக்கும் ஒரு இதயம் தான் உள்ளது. பான்கிரியாஸ் மற்றும் நுரையீரல் ஆகியவையும் ஒன்றுதான் இருக்கிறது. வயிற்றுப் பகுதி ஒட்டிய நிலையில் சத்திர சிகிச்சை மூலம் பிறந்துள்ள இரட்டைக் குழந்தைகளை பிரித்தெடுக்க மருத்துவர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

கடந்த 2009 இல் இதேபோன்ற சிக்கலுடன் பிறந்த இரட்டைக் குழந்தைகளை பிரித்தெடுக்க மேற்கொண்ட முயற்சியில் ஒரு குழந்தை மட்டுமே உயிர் பிழைத்தது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# மின்சார உற்பத்திக்காக மரம் வளர்க்கும் திட்டம்

(கொழும்பு)

மின்சாரத்தை உற்பத்தியாக்குவதற்குத் தேவையான டெண்ரோ மற்றும் கிளிசீரியா போன்ற மரங்களை பயன்படுத்தும் நோக்கில் பெருந்தோட்டங்களை உண்டாக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன்முதற்படியாக இலங்கையரும் சீனர் ஒருவரும் இணைந்து உயிர்த் திணிவைப் பயன்படுத்தி 10 மெகா வோட்ஸ் மின் உற்பத்தி செய்யும் 10 மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கவுள்ளனர்.

இந்தக் கூட்டு முயற்சி தனி ஒரு சீனர் இலங்கையில் மேற்கொள்ளும் அதிகூடிய முதலீடு ஆகும். இது தொடர்பான ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இதுபற்றிக் கருத்து தெரிவித்த மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பெருந்தோட்டங்கள் ஒரே வகை மரங்களைக் கொண்டிருப்பதை தவிர்க்கும்படி கேட்டுக் கொண்டார்.

அத்துடன், " மனித நாகரிகம் சுவட்டு எரி பொருள் சகாப்த முடிவை எட்டி வருகின்றது.அத்துடன் சுவட்டு எரிபொருள் பாவனை உலகின் பல பிரச்சினைகளின் பின்னணியாக உள்ளது. சூரிய சக்தியைப் பயன்படுத்துவதே மிகவும் வினைத்திறன் மிக்க வழியாகும்.

ஆனால், சூரிய சக்தியை மின்சக்தியாக மாற்றும் போட்டோவொலடைக் என்ற தொழில்நுட்பம் அதிக செலவானதாக உள்ளது. ஆனால் பலர் சூரிய ஒளித் தொகுப்பை நிகழ்த்தும் தாவரங்களை மறந்துவிடுகின்றனர்'' என அமைச்சர் மேலும் கூறினார். (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷில் ரயில்கள் நேருக்குநேர் மோதியதில் 14 பேர் உயிரிழப்பு



(டாக்கா)

வங்கதேசத்தில் இரண்டு ரயில்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்தனர். டாக்காவில் இருந்து சிட்டகாங்குக்கு கடந்த 8 ஆம் திகதி சென்ற ரயில் நரசிங்கடி மாவட்டத்தில் உள்ளரயில்நிலையத்தில்நின்றது. சிக்னல் கிடைத்ததும் அது சிட் டகாங்கை நோக்கி புறப்பட்டது. அந்த ரயில் சென்று கொண்டிருந்த போது அதே தடத்தில் டாக்கா நோக்கி எதிரில் ஒரு ரயில் வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த இரு ரயில்க ளின் ஓட்டுநர்களும் ரயிலை நிறுத்த முயன்றனர்.


ஆனால் இந்த முயற்சி பலனளிக்காமல் இரு ரயில்களும் ஒன்றோடொன்று பயங்கர சத்ததுடன் மோதியது.

இந்த விபத்தில் 14 பேர் இறந்ததாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். விபத்தில் சிக்கி நொறுங்கிக் கிடக்கும் ரயில் பெட்டிகளுக்கு இடையே மீட்பு நடவடிக்கையில் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ஸ்ரீ)



மெக்சிக்கோவில் இடம்பெற்ற காலநிலை மாறுபாட்டில் உலக நாடுகளின் பங்கு பற்றிய கருத்தரங்கில், உலகின் பெயர் பெற்ற இடங்களைச் சுட்டிக் காட்டும் வித்தியாசமான படம் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# சிலி நாட்டு சிறையில் தீ விபத்து; 83 கைதிகள் உடல் கருகிப்பலி



சிலி நாட்டு சிறையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 83 கைதிகள் பலியாகினர். சிலி நாட்டின் சாண்டியாகோ நகர மத்திய சிறையில் ஆயிரத்து 960 கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். நேற்று முன்தினம் காலை சிறையின் ஒரு பகுதியில் ஏற்பட்ட தீ, கைதிகள் அடைக்கப்பட்டிருந்த பகுதிக்கு பரவியது.

அறைகள் பூட்டப்பட்டிருந்ததால் உடனடியாக தப்பிக்க முடியாத கைதிகள் 83 பேர் உடல் கருகி பலியாகினர். 14 பேர் படுகாயமடை ந்தனர். 200 பேரை மட்டும் பொலி சார் காப்பாற்றியுள்ளனர். இறந்த கைதிகளின் உறவினர்கள் கோபமடைந்து சிறை காவலர்கள் மீது கல் லெறிந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். (ஸ்ரீ-2)

# நோபல் பரிசுக்கு போட்டியாக சீனாவின் அதிரடி நடவடிக்கை

(பீஜிங்)

மேற்கத்திய நாடுகள் சீனாவை தனிமைப்படுத்த முயல்வதாக சீன ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

சீன அரசுக்கு எதிராக போராடி வரும் லியூ ஷியாபோவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுவ தாக அறிவிக்கப்பட்டது.

இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சிறையில் இருக்கும் லியூவை விடுதலை செய்யவும் அந் நாடு மறுத்துவிட்டது.



நோபல் பரிசு வழங்கும் விழாவை சீனா உட்பட அதன் 18 நட்பு நாடுகளும் புறக்கணிப்பதாக அறிவித்தன. இதில் தற்போது இலங்கையையும் அடக்கம்.

நோபல் பரிசுக்கு போட்டியாக சீன தத்தவஞானி கன்பூசியஸ் பெயரில்கன்பூசியஸ் அமைதி பரிசு வழங்கப்போவதாகவும் சீனா அறிவித்தது. இந்த பரிசுக்கு தாய்வான் நாட்டு முன்னாள் ஜனாதிபதி லியான் சான் தெரிவு செய்யப்பட்டு ள்ளார்.

இதற்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதனிடையே மேற்கத்திய நாடுகள் சீனாவை தனிமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன என்று சீனாவின் அரசு ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

லியூ ஷியாபோ சீன அரசை கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபடுகிறார். அவருக்கு சில மேற்கத்திய நாடுகளில் உள்ள அமைப்புகள் உதவி செய்கின்றன என்று அவை கூறுயுள்ளன. (ஸ்ரீ-2)




# பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸின் கார் மீது மாணவர்கள் தாக்குதல்

பிரித்தானியாவில் கல்வி மற்றும் பல்கலைக்கழக கட்டணங் களை உயர்த்தி பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு விடப்படவுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் இளவரசர் சார்ள்ஸின் கார் மீது தாக்குதல் நடத்தியதால் பிரித்தானியாவில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பிரித்தானியாவில் பல்கலை. கல்வி கட்டணத்தை 3 ஆயிரம் பவுண்ட்களிலிருந்து 9 ஆயிரம் பவுண்ட்களாக உயர்த்தி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதற்கு மாணவர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. நாடு முழுவதும் கடந்த ஒரு வாரமாக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் லண்டனில் ஒரு விருந்து நிகழ்ச்சிக்காக இளவரசர் சார்ள்ஸ், மனைவி கமீலா ஆகியோர் காரில் சென்று கொண்டிருந்தனர்.



அவர் சென்ற கார் மீது மாணவர்கள் திடீர் தாக்குதல் நடத்தினர். எனினும் இந்தச் சம்பவத்தில் இளவரசர் காயமின்றி தப்பியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

## ஐவரி கோஸ்ட் ஜனாதிபதித் தேர்தலில்

# எதிர்க்கட்சித் தலைவர் ஒயூஆட்ரா வெற்றியீட்டியதாக ஐ.நா. அறிவிப்பு

ஐவரிகோஸ்ட் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் அலசானி ஓயூஆட்ரா வெற்றியீட்டியதாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை அறிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவரே வெற்றியீட்டியதாக பாதுகாப்புப் பேரவை குறிப்பிட்டுள்ளது. ஐவரி கோஸ்ட் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பாதுகாப்புப் பேரவையில் மூன்று நாள் விவாதம் நடைபெற்றுள்ளது.

ஐவரி கோஸ்ட்டின் ஜனாதிபதி காபாக்பூ சர்வதேச அழுத்தங்களை மீறி தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் முனைப்புக்களில் தீவிரம் காட்டி வருவதாகவும் நாட்டு மக்களின் அபிலாஷை களுக்கு புறம்பான வகையில் ஜனா திபதி செயற்பட்டு வருவதாகவும் ஐக் கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை அறிவித்துள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் அமைப்பு எல்லை மீறிச் செயற்படுவதாக ரஷ்யா அறிவித்துள்ளது. ஒரு வேட்பாளருக்கு மட்டும் ஆதரவளிக்கும் செயன்முறை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என ரஷ்யா குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஆப்கானிஸ்தானில் மருமகளின் மூக்கை அறுத்த மாமனார் கைது

ஆப்கானிஸ்தானில் ஜென் ஜுமா குல் ஹிமேட் பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஆயிஷா வயது (18) ஆவார். இவர் தனது கொடூர கணவனை விட்டு பிரிந்து சென்று தலைமறைவாக வாழ்ந்தார். இதை அறிந்த கணவரின் குடும்பத்தினர் அவரை தேடி கண்டு பிடித்து இழுத்து வந்தனர்.தலிபான் கமாண்டர் முன் நிறுத்தினர்.அவர் வழங்கிய தீர்ப்பின் படி வீட்டை விட்டு ஓடிய ஆயிஷாவின் மூக்கை அறுத்து அவரது மாமனார் மான பங்கம் செய்தார்.இந்த செய்தி ஆயிஷாவின் படத்துடன் ஒரு பத்திரிகையில் வெளியானது.

இது உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து ஒரு சமுக சேவை அமைப்பு ஆயிஷாவை அமெரிக்காவுக்கு அழைத்து சென்று அறுக்கப்பட்ட மூக்கை ஆபரேசன் மூலம் சரி செய்து அவருக்கு மறு வாழ்வு அளித்தது. (ஸ்ரீ-2)

## முழு வளர்ச்சி அடைந்த

# கடைவாய்பற்களுடன் பிறந்த அதிசய பெண் குழந்தை



(லண்டன்)

குழந்தைகளுக்கு பிறந்து 6 மாதத்தில் இருந்து ஒரு வருடத்திற்குள் பல் முளைப்பதுதான் இயல்பு. இதனை மீறி சில குழந்தைகளுக்கு முழு வளர்ச்சியடையாத பற்கள் இருப்பது சாத்தியம்.

ஆனால் முழுமையாக வளர்ச்சி அடைந்த கடைவாய் பற்களுடன் ஒரு அதிசய பெண் குழந்தை இங்கிலாந்தில் பிறந்துள்ளது. அந்த அதிசயக் குழந்தையின் பெயர் பயி ஆம்ஸ்டராங்க் பிறந்த போது பயிக்கு இரண்டு முன்பற்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதுவே அதிசயம் என்று நினைத்த பெற்றோருக்கும் டாக்டர்களுக்கும் மேலும் ஒரு விந்தை தெரிய வந்தது. பயிக்கு நன்கு வளர்ச்சியடைந்த 2 கடைவாய்பற்களும் இருந்தன.

பிறந்து 15 நாட்களே ஆன நிலையில் பயிக்கு தாய்ப்பால் புகட்டிய தாய் பாட்ரீஷியா கால்பில்ட் குழந்தை பால் குடிக்கும் போது ஏதோ குத்துவது போன்ற வலி இருப்பதை அறிந்து குழந்தையின் வாயை பார்த்தார்.

அப்போது கடைவாய் பற்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து அவர் கூறுகையில், பிறந்த போது பயிக்கு கீழ்ப்பற்கள் சிறியதாக 2 இருப்பதைப் பார்த்தேன் அதுவே எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்நிலையில் அவளுக்கு முழு வளர்ச்சியடைந்த 2 கடைவாய் பற்கள் இருப்பது தெரிந்தது என்று கூறினார். நன்கு வளர்ந்த கடைவாய் பற்களுடன் குழந்தை பிறந்தது அதிசயம் என்கிறார்கள் வைத்தியர்கள். (ஸ்ரீ-2)



கிரீஸ் நாட்டின் தலைநகர் எதன்சில் அந்நாட்டு பிரதமர் ஜார்ஜ் பாபண்டிரஸை பாலஸ்தீன ஜனாதிபதி முகமத் அப்பாஸ் (வலது) சந்தித்து கைலாகு கொடுப்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபையினால் சேர்.பொன். இராமநாதனின் குருபூசைத் தின நிகழ்வுகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது. நிகழ்வின் தலைவரும் பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர்சபை தலைவரும் பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம், கொழும்பு பல்கலைக்கழக அரசறிவியல்துறை தலைவரும் பேராசிரியருமான ஈ.எஸ்.ஐ.கீதபொன்கலன் ஆகியோர் உரையாற்றுவதையும், இராமநாதன் கல்லூரி மாணவர்களின் நடனம் இடம்பெறுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்-எஸ்.கரன்)

## எழுத்து மூல சாட்சியம் அளிக்க விரும்புவோருக்கு

(கரவெட்டி)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் கடந்த 13 ஆம் திகதி வடமராட்சிப் பிரதேசங்களில் இடம்பெற்றது.

இதில் சாட்சியமளிக்காதோர் எழுத்து மூலமான தமது சாட்சியங்களை தமது பிரிவு கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தி தமது பிரதேச செயலகங்களில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-3-24)

# ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டது

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவிற்கு எதிராக லண்டனில் நடத் தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நீண்ட காலமாக திட்டமிடப்பட்டு மேற் கொள்ளப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடு ஒன்றின் தலைவருக்கு பிரிட்டன் வழங்கிய பாதுகாப்பு எந்த வகையிலும் திருப்தி அடையக் கூடிய தல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி தனிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற் கொண்ட போதிலும் வெளிநாட்டு தலைவர் ஒருவருக்கு பாதுகாப்பு வழங்கப் படவில்லை என அவர் தெரிவித் துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள், அல்கொய்தா போன்ற அமைப்புக்களுக்கு பிரிட்டன் தடை விதித்துள்ள போதிலும், புலிக் கொடிகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது ஆச்சரியமளிப்பதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

அல்கொய்தா அமைப்பின் ஆதரவாளர்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்தினால் அதற்கு பிரிட் டன் அனுமதி வழங்குமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதிக்கு உரையாற்ற சந்தர்ப்பம் அளிக்க முடியாதகார ணத்தினால் ஒக்ஸ்போட் ஒன்றியத்தின் தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாகக் குறிப்பிட் டுள்ளார். (ஶ்ரீ-2)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

**கிளிநொச்சி மத்திய கல்லூரி**

*கணிதப்பிரிவு*

க.மகிந்தன் 3ஏ மாவட்டநிலை -01, அ.கிருஸ்ணானந்தன்- ஏ,பி, சி -மாவட்டநிலை 02, எஸ்.சிந்துஜன்- 2பி, சி மாவட்டநிலை -03, ம. அபிராமி - பி,2சி, தி.றமணன்- பி,2சி, இ.அனித்தா -3சி

*உயிரியல்*

க.சஞ்சீவன் -ஏ,2பி மாவட்ட நிலை- 02, ச.சஜந்தன்- ஏ,2பி மாவட்ட நிலை -03, செ.சிவகேணசன்- ஏ,2சி, ஜெ.யசோதினி -ஏ,பி,சி.

**யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி**

*கலைப்பிரிவு*

ம.நிலானி -2ஏ,பி, வி.கார்த்திகா- 2ஏ,பி, பே.துவாயா-2ஏ,சி, வி. சுலக்சனா-2ஏ,சி, த.பத்மசூரியா-ஏ,2பி, வி.வினுஜா -ஏ,2பி, சி.தர்சிகா -ஏ,2பி, கெ.அஜந்தா -ஏ,2பி, யோ. கார்த்திகா-ஏ,பி,சி,கே.சுபாசினி-ஏ,2சி

யோ.தபோதினி-ஏ, 2சி, உ.ஜனனி ஏ,சி,எஸ், ச.சங்கீதா-ஏ,2எஸ், சு.சிவதர்சினி - 3பி, என்.சர்மிலா-3பி, ர.சந்துயா -3பி, கா.அனித்தா-3பி, பு. சுபகலா-2பி,சி

கு.கௌசிகா-2பி, சி, ஆ.லோயனா-2பி, சி, தே.அஜந்தா-2பி, சி, சி. விஜய சோபனா-2பி,சி, சி.சுரேக்கா-2பி,சி, வெ. நிறஞ்சினி-2பி, சி, க.றஜித்தா-2பி, சி, அ.கம்சா-பி, 2சி, சி. அனுலா-பி, 2சி, த.லாவண்யா-பி,2சி, ர.விவிந்தா-பி,2சி, பொ. தர்சினி-பி, 2சி, சி.அபிரா-பி, 2சி, தெ.சுதர்சினி-பி,2சி, சி.கீர்த்திகா-பி,சி,எஸ்,

சௌ.அகிலா-பி,சி,எஸ், செ. கஜேந்திரன்-பி,சி,எஸ், த. துவா ரகா பி,சி,எஸ்,சி.பிரம்மியா-பி,சி,எஸ், த.மேரிஅல்பேட்டா- பி,சி,எஸ்.

ஜெ.சுமித்தா -3சி, ஞா.கதிகா-3சி, சி. ஜீவப்பிரியா-3சி, பா.தர்சிகா-3சி, கி. சோபிகா-3சி , நி.நிறோஜினி-2சி,எஸ்

**விஞ்ஞானப்பிரிவு**

சி.கீர்த்தினி-பி, 2சி, து.சமித்தா-3சி, சி.திரிசிகாயினி-3சி

**வர்த்தகப்பிரிவு**

நி.கஜாணா - 2பி,சி, அ.அஜித்தா-பி,2சி, பா.சஜிதா- பி,சி,எஸ். (ஶ்ரீ-19)

# பிரான்ஸ் நாட்டில் கடும் குளிர்; பனியால் உறைந்தது பரீஸ் நகரம்

(பரீஸ்)

பிரான்சில் கடும் குளிர் நிலவு கிறது. எனவே பரீஸ் நகரம் பனியால் உறைந்துள்ளது.

குளிர்காலம் தொடங்கியதை தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் கடும் பனிப்பொழிவு நிகழ்கிறது. இதனால் அங்கு அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பிரான்சில் கடும் குளிர் நிலவுகி றது.

தலைநகர் பரீஸ் பனிக் கட்டியால் உறைந்து மூழ்கியது. அங்குள்ள வீதிகளில் சுமார் 4சென்ரி மீற்றர் உயரத்துக்கு பனி உறைந்து நிற்கிறது. இதனால் அங்கு பஸ் போக்குவரத்து நிறுத் தப்பட்டுள்ளது.

புறநகர்ப் பகுதிகளில் மட்டும் சில பஸ்கள் ஓடின. விமான நிலையமும் பனியால் மூடியது. இதனால் அங்குள்ள சார்லஸ் டி காலீ விமான நிலைய சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மூடப்பட்டது.

மாலையில் விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது. அப்போது 4 ஓடு தளங்கள் மட்டுமே செயல் பட்டன. இதனால் சுமார் 3 மணி நேரம் தாமதமாக விமானங்கள் இயக் கப்பட்டன.

உலக அதிசயங்களில் ஒன் றான ஈபிள்டவர் பனியால் சூழப்பட் டுள்ளது. இதனால் அது மூடப்பட் டது. பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்படாததால் அங்கு வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். மொத்தத்தில் பரீஸ் நகர மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

ஸ்கொட்லாந்தும் கடும் பனிப் பொழிவால் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு வீதிகள் மற்றும் தண்டவாளங் களில் பனி கொட்டிக் கிடக்கிறது. இதனால் ஸ்கொட்லாந்தின் மிகவும் பரபரப்பான எடின்பர்க் கிளாஸ்கோ இடையேயான 32 கி.மீ.தூர வீதி மூடப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காக பயன்படுத்துவதற்கு வான் (Van) ஒன்றின் சேவையை அவ்வாகனத்திற்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி, திருத்த வேலைகள் போன்றவற்றுடன், கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றது.

மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக ரூபா 300.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை உதவிப்பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 2010.12.23 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவல கத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடலாம். கேள்விப் பத்திரப் படிவம் மற்றும் நிபந்தனை விபரங்களை நிர்வாகக் கிளையில் உதவிப் பதிவாளரிடம் தொடர்புகொண்டு பார்வையிடலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

(C-1788) பதிவாளர்


# படையினரின் சீருடையை மற்றவர்கள் அணிவதற்கு முன் அனுமதிபெற வேண்டும்

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நடிகர், நடிகையர்கள் ஊடகங் களின் முன்னாலும் படப்பிடிப்புக்களுக்காகவும் பாதுகாப்புப் படைகளின் சீருடைகள் மற்றவர்கள் அணிவதற்கு முன் அனுமதி பெற வேண்டும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித் துள்ளது.

நடிகர்கள், நடிகையர்கள் ஊடகங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சிகளுக்காக பாதுகாப்புப் படையினரின் சீருடைகள் பயன்பாட்டை தரப்படுத்துவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்படி சூழ்நிலையில், எந்த வொருநடிரோ அல்லது நிறுவன மோ பாதுகாப்புப் படைகளின் சீருடையை பயன்படுத்த விரும்பி னால் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் மூலம் பாது காப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள் ளது.

இச் சீருடைகளை பயன் படுத்துவதற்கான ஒழுங்குவிதிகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட் டுள்ளன. எந்தவொரு நபரோ நிறுவ னமோ இவ்விதிகளை மீறினால்வழக்குத் தொடரப்படும் என பாது காப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை பாதுகாப்புப் படை யினரின் சீருடைகளை தொலைக் காட்சி செய்திகளில் காண்பிப்பது தடுக்கப்படவில்லை எனவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித் துள்ளது. (ஶ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் உரமின்றி நேர்மைதிறனுமின்றி
வஞ்சனை செய்வாரடி –கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி. – *சுப்பிரமணிய பாரதியார்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# 'சீமான்' உனக்குப் பெயரல்ல! நீ ஈழத்தமிழரின் 'சீமான்'

'நாம் தமிழர்' கட்சியின் தலைவர் சீமான் நேற்றைய தினம் விடுதலையானார் என்ற செய்தி அறிந்து நெஞ்சம் நெகிழ்ந்தது.

எங்களுக்கு குரல் கொடுத்ததற்காக கடந்த ஐந்து மாதங்களாக சிறைவாசம் அனுபவித்த 'சீமான்' உண்மையில் ஈழத்தமிழர்களின் 'சீமான்' என்பதில் எந்த ஐயமுமில்லை.

சோதரா! ஈழத்தமிழர்கள் துன்பப்பட்ட போது நீ துடித்தெழுந்தது, அதற்காக சிறையில் அடைபட்டது, உன் தமிழ் உணர்வுகண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிகின்றோம்.

சில வேளைகளில் நான் நினைப்பதுண்டு. ஈழம் தான் தமிழகம். தமிழகம் தான் ஈழம் என்று எடுத்துக் கொண்டால், உன்னைப்போல் தமிழுக்காக குரல் கொடுக்க– அதற்காக சிறைசெல்ல எங்களில் யாரேனும் இருந்திருப்பார்களா? ஓ! விடை தெரியாத அந்த வினாவுக்கு முன் 'சீமான்' என்ற உயரிய தமிழ்ப்பற்றாளனின் தியாகம் பளிச்சிடுகின்றது.

தமிழ்... தமிழ்... என்று கத்திய தமிழகத்தின் முக்கிய தலைவர்கள் இப்போது பணம்... பணம்... என்றும் பதவி... பதவி... என்று பிதற்றத் தொடங்கிவிட்டனர்.

போலித்தனங்கள், பதவி மோகங்கள், அதற்காக சொல்லவேண்டியதை துணிந்து சொல்லாமல் 'பந்தா' போடும் நடிப்புக்கள் என்ற மாயைக்குள் உழன்று எல்லாவற்றையும் கெடுத்துவிட்டு தமிழே 'எங்கள் மூச்சு' என்ற கோடரிக்காம்புகள் மத்தியில் நீ மாபெரும் தமிழ்ப்பற்றாளன்.

ஓ! உன்னையும் உன் தமிழ் உணர்வையும் நசுக்கி விட சிறைக்கு அனுப்பியவர்களுக்கு தமிழக அரசியலிலிருந்து விடைகொடுக்கவேண்டிய சீமானும் நீதான்.

நீதி உன்னைக் காப்பாற்றிவிட்டது. ஈழத்தில் வாழும் தமிழினம் மீள்குடியமர்விற்காய் அத்திபாரம் வெட்டும் வேளையில் உனக்கு விடுதலை.

வன்னியுத்தத்தில் இந்தியாவும் குற்றவாளியென்று அமெரிக்கா கூறும்போது நீ குற்றமற்றவன் என்ற தீர்ப்பு.

ஓ! அதோ! கீழ்வானில் விடிவெள்ளி தெரிகிறது சீமான்.

எங்கள் துயரை பிரிட்டன் உணர்ந்தபோது காய்ந்து போன எங்கள் கண்ணீர்த் தழும்புகளை நீக்கலாம் என்ற நம்பிக்கையோடு ஒரு கன்னத்தை துடைத்துக்கொள்வோம். மறுகன்னத்தைத் துடைப்பதில் நம்பிக்கையீனம் நேற்றுவரை எங்கள் கைகளுக்குத் தடை போட்டன.

ஆனால் உனக்கு விடுதலை என்றபோது இரண்டு கரங்களும் இரண்டு கன்னங்களையும் துடைத்துக் கொண்டன.

சீமான் குற்றமற்றவர். ஈழத் தமிழருக்காக அவராற்றிய உரை– செய்த ஆர்ப்பாட்டம் அத்தனையும் நியாயமானதென்பதை இந்திய தேசத்து நீதித்துறை ஏற்றுவிட்டது.

இறைவா! நன்றி கூறிக்கொள்கின்றோம்.

சீமான்... தொடங்கு உன் வேலையை. சட்டசபைத் தேர்தல் வருகிறது.

காகிதத்தில் கடிதம் எழுதி கடல் நடுவே ஓடவிடும் பாசாங்குக்காரரை வீட்டுக்கு அனுப்பு. எல்லாம் உன்னால் முடியும்.

# கடத்தப்பட்டோர், காணாமல் போனோரை கண்டுபிடிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கடத்தப்பட்டவர்களையும் காணாமல் போனவர்களையும் தேடிக் கண்டுபிடிக்குமாறுகோரி அரசாங்கத்தை வலியுறுத்தும் வகையிலான ஆர்ப்பாட்டமொன்று சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில்கலந்து கொண்ட காணாமல் போனோரை தேடியறியும் குழுவின் இயக்குநர் சுந்தரம் மகேந்திரன் தெரிவிக்கையில்,

அரச கட்டுப்பாட்டு பகுதியில் கடத்தப்பட்டும் காணாமல்போனோர்கள் தொடர்பில் தமக்கு 5 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. யுத்தத்தினால் 96 ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக் கானவர்கள் அங்கவீனமாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து இவர்கள் கடத்தப்படும் காணாமல் போகும்போது அதற்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும்.

கடத்தப்பட்டும் காணாமல்போனவர்களின் உறவினர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகின்றனர். கடத்தப்பட்டும் காணாமல் போனவர்களின் மனைவிமார்கள் சமூகப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர் என்றார். (ஸ்ரீ-2)

## 50 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பறிமுதல்

இலங்கையில் முதல் தடவையாக அதிகூடிய ஹெரோயின் போதைப் பொருள் தொகை ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுகத்தில் நேற்று முற்பகல் பாகிஸ்தானில் இருந்து வந்த கொள்கலன் ஒன்றில் இருந்து 50 கிலோகிராம் எடையைக் கொண்ட இந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் அதன் சந்தைப் பெறுமதி கணிக்கப்படவில்லை எனினும் இது பல கோடி ரூபாய்கள் பெறுமதியானதாக இருக்கலாம் என போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களுடன் ஒரு பாகிஸ்தானியர் உள்ளிட்ட நான்கு பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## இடமாற்றம் பெறும் ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இடமாற்றப்பட்டியலின்படி துணுக்காய், கிளிநொச்சி, மன்னார், மடு, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு ஆகிய வலயங்களிலிருந்து எதிர்வரும் முதலாம் திகதிமுதல் செயற்படும்படியாக வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற வருகைதரவுள்ள ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் 13 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள விசேட கல்வி அலகில் நடைபெறவுள்ளது. ஆதலால் அவ்வாசிரியர்கள் தவறாது கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு வலிகாமம் கல்விப்பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (சு)

## சூழல் பாதுகாப்பு வரியை பெற்றுக் கொள்ளவும்

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதிவரை மோட்டார் சைக்கிளிற்கான வாகன அனுமதிப்பத்திர கட்டணத்துடன் செலுத்திய சூழல் பாதுகாப்பு வரியினை இதுவரை மீள பெற்றுக் கொள்ளாதவர்கள் இம்மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் மீளபெற்றுக்கொள்ளுமாறு பிரதேசசெயலரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3)

## போட்டோ கொப்பி இயந்திரம் கையளிப்பு

ஸ்ரீ வித்தியா இந்துபீடத்தின் சமய சமூகப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஏற்பாடாக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் போட்டோக் கொப்பி இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளார்.

இவ்போட்டோக்கொப்பி இயந்திரத்தினை ஸ்ரீ வித்யா இந்து பீடத்தின் செயலாளர் [illegible] விடம் கையளித்துள்ளார். (ஸ்ரீ-4)

# அதிக குளிரால் சுயநினைவு இழந்த மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

கம்பளை அம்புலுவாவ மலைக் குன்றினைப் பார்வையிடுவதற்காகச் சென்ற பாடசாலை மாணவர்களில் 18 பேர் கடும் குளிர் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு சுயநினைவை இழந்த நிலையில் கம்பளை வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் உடல்நிலை தற்போது தேறி வருவதாக கம்பளை வைத்தியசாலை யின் வைத்திய அதிகாரி டாக்டர் சரத் வீரபண்டார தெரிவித்துள்ளார்.

எம்பிலிபிட்டிய பாடசாலையொன்றிலிருந்து கம்பளை நகருக்கு சுற்றுலா சென்ற மாணவர்கள் சிலர் அம்புலுவாவ மலைக்குன்றினையும் பார்வையிடச் சென்றுள்ளனர்.

மாலைவேளையில்இவர்களதுபயணம் தொடரப்பட்டுள்ளதால் அங்கு நிலவிய கடும் குளிர் காரணமாக 18 மாணவர்கள் சுய நினைவற்ற நிலையிலும் கை, கால்கள் விறைந்த நிலையிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாணவர்களுக்கான தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்ட நிலையில் அவர்களின் உடல்நிலை தற்போது தேறி வருவதாக வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## வினைதிறன்காண் பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

வடமாகாணசபையின் பட்டதாரிச் சேவையைச் சார்ந்த அலுவலர்களுக்கு நடத்தப்படவிருக்கும் 2ஆம் வினைதிறன்காண் பரீட்சையை முன்னிட்ட பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று இரண்டு வெவ்வேறான தினங்களாக இன்றும், நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்.இந்துக் கல்லூரியில் வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே இதில் ஏதாவது ஒன்றில் கலந்துகொண்டு அனைவரும் பயனடையலாம் என செயலாளர் கே.எஸ்.மயூரன் அறிவித்துள்ளார். (சு)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு நன்கொடை வழங்கல்

அபிவிருத்தி வங்கியின் பிரதான பங்குதாரர்களாகிய கூட்டுறவுச் சங்கங்களினை வலுப்படுத்தும் நோக்குடன் 17 இலட்சம் ரூபாயினை நன்கொடையாக வழங்கும் நிகழ்வு சனச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வி.கே.அருந்தவநாதன் கலந்துகொள்கிறார். சனச அபிவிருத்தி வங்கியின் கூட்டுறவுச் சங்கங்களினை வலுப்படுத்தல் சம்பந்தமாக முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் ஒன்றான சுனாமியால் பாதிக்கப்பட்ட 21 சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டினை மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (சு)

# சீன உணவு விடுதிகளில் அசத்தும் ரோபோக்கள்

(பீஜிங்)

சீனாவின் ஜினான் நகரில் புதிதாக ஒரு விடுதி திறக்கப்பட்டிருக்கின்றது. மொத்தம் 6 பேர் உணவு பரிமாறுகின்றனர். இவர்கள் அனைவரும் (ரோபோக்கள்) இயந்திரமனிதர்கள். இவ் ரோபோக்கள் வருவதற்கென சைக்கிள் போன்ற வாகனமும் இருக்கின்றது.

ஓடர் செய்த சிற்றுண்டிகளை எடுத்து வருவது, பரிமாறுவது பரிமாறியதும் வெற்றுக் கோப்பைகளை எடுப்பதும் இவ் ரோபோக்கள்தான். இவ்விடுதி முற்று முழுதாக இயந்திர மனிதர்களால் இயக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



நீங்கள் உபநிடதங்களில் கூறப்படுகிற கதைகளைப் படித்ததில்லையா? நான் ஒரு கதையினைக் கூறுகிறேன் கேளுங்கள். சத்ய காமன் எனும் சிறுவன் கல்வி கற்பதற்காக ஒரு குருவை நாடிச் சென்றான். குரு சில பசுக்களை அவன் பொறுப்பில் ஒப்படைத்து அவனைக் காட்டிற்கு அனுப்பினார். மாதங்கள் சில சென்றன. நல்ல கவனிப்பினால் பசுக்கள் இரண்டு மடங்காகப் பெருகியிருப்பதை கண்டு சத்யகாமன் ஆசிரியரிடம் திரும்ப எண்ணினான். வரும் வழியில் ஒரு காளை மாடும், நெருப்பும், சில விலங்குகளும் அவனுக்குப் பிரம்ம ஞானத்தைப் போதித்தன. திரும்பி வந்த சீடனை ஆசிரியர் பார்த்தார். முதல் பார்வையிலேயே இவன் பிரம்மஞானத்தை அறிந்து கொண்டுவிட்டான் என்பதை உணர்ந்து கொண்டார். இயற்கையோடு இணைந்து வாழ்வதனால், அதனோடு இடையறாது தொடர்பு கொள்வதனால் உண்மையான கல்வியைப் பெற முடியும் என்ற நீதியை இக்கதை நமக்குப் புகட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வர் கருணாநிதியை எதிர்த்து போட்டியிடுவீர்களா?

## சீமான் பரபரப்பு பேட்டி



தன் மீதான தேசிய பாதுகாப்பு சட்டத்தை சென்னை உயர் நீதிமன்றம் இரத்து செய் ததையடுத்து வேலூர் சிறையில் இருந்து சீமான் விடுதலை ஆனார். சிறையில் இருந்து விடுதலையான சீமானுக்கு நாம் தமிழர் இயக் கத்தினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

சிறையில் இருந்து வெளியே வந்த சீமான் செய்தியாளர்களிடம் பேசுகையில், நான் இந் திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக தேசிய பாதுகாப்பு சட்டத்தில் அடைத்தனர்.

இரண்டு முறை தேசிய பாதுகாப்பு சட்டம் என் மீது பாய்ந்துள்ளது. இரண்டு முறையும் தமிழக அரசு தவறாக என் மீது சட்டத்தை போட் டுள்ளது என நீதிமன்றம் என்னை விடுதலை செய்துள்ளது. இந்த முறை 5 மாதங்கள் சிறையில் இருந்துள்ளேன். இதனால் எனது தொழில் முடங்கியது. இதற்கெல்லாம் தமிழக அரசுதான் காரணம்.அதனால் தமிழக அர சிடம் நஷ்ட ஈடு கேட்டுள்ளோம் என்றார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்வி களுக்கு சீமான் பதில் அளித்தார்.

**கேள்வி: தமிழக அரசு சட்டத்துக்கு புறம் பாக கைது செய்ததாக கூறுகிறீர்களே அது குறித்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?**

பதில்: தமிழக அரசு மீது வழக்கு போட முடிவு செய்துள்ளோம்.

**கேள்வி: வரும் தேர்தலில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: நாங்கள் தேர்தலில் போட்டியிட போகிறோம்.

**கேள்வி: நீங்கள் போட்டியிடுவீர்க ளா?**

பதில்: நான் போட்டியிடவில்லை

**கேள்வி:ஆளுங்கட்சியை எதிர்த்து போட்டியிடுவீர்களா?**

பதில்: நாம் தமிழர் இயக்கத்துக்கு காங் கிரஸ் கட்சி கொள்கை ரீதியான எதிரி.அவர்க ளோடு கூட்டணி யார் வைத்தாலும் அவர் களை எதிர்த்து பிரசாரம் செய்வோம்.

**கேள்வி: முதல்வர் கருணாநிதியை எதிர்த்து நீங்கள் பொது வேட்பாளராக நிறுத் தப்படபோவதாக நாம் தமிழர் இயக்கத்தி னரால் சொல்லப்படுவது உண்மையா?**

பதில்: நடக்கலாம்

இவ்வாறு சீமான் பதில் அளித்தார். (ஸ்ரீ)

# காபன் நிறைந்த புதிய கிரகம் கண்டுபிடிப்பு

வைரத்தின் அடிப்படை பொருளான காபன் நிறைந்த புதிய கிரகத்தை அமெரிக்க வாழ் இந்தியா தலைமையிலான விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பனாரஸ் இந்து பல்கலைக்கழக முன்னாள் மாணவர் நிக்கு மதுசூதனன் அமெரிக்காவின் பிரின்ஸ்ட் பல்கலைக்கழகத்தில் அறிவியல் பேராசிரியராகபணியாற்றுகிறார். அவரும்மேலும் சில விஞ்ஞானிகளும் இணைந்து புதிய கிரகம் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர்.

அதற்கு டபிள் யூ ஏ எஸ் 12 பி என்று பெய ரிட்டுள்ளனர். அந்த கிரகத்தில் ஒட்சிசன் அளவை விட காபன் அதிகம் இருப்பதாக தெரிய வந் துள்ளது. காபன் அதிக வெப்பமானது என்பதால் இந்த கிரகத்தின் வெப்பம் இரும்பை உருக் கும் அளவு இருக்கலாம் என்று நிக்கு மது சூதனன் தெரிவித்துள்ளார்.

பூமியில் இருந்து வெகு தொலைவில் இந்த கிரகம் உள்ளது. பூமியை போல இது சுழலாததால் ஒரு பக்கம் நட்சத்திரத்தை நோக்கி இருக்கிறது. அதனால் வெளிச்சமாக உள்ளது. மற்றொரு பக்கம் இருளாக இருக்கிறது.

இருளான பக்கத்தில் காபனின் அடர்த் தியால் வைரம் போல சில இடங்களில் மின் னுகிறது என்றார் மதுசூதனன். வைரத்துக்கு அடிப் படையான பொருள் காபன் என்பதால் காபன் மட்டுமே நிறைந்த மேலும் சில கிரகங்கள் இருக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் நம்பு கின்றனர் அவை வைரம் பதித்தது போல மின்னக் கூடும் என்றும் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)

# சீமானை சிறையில் அடைத்ததற்காக தமிழக அரசு மீது வழக்கு தொடருவோம்

## அவரது வழக்கறிஞர் தெரிவிப்பு

(சென்னை)

சீமானை சிறையில் வைத்ததற்காக தமி ழக அரசு மீது வழக்கு தொடுக்க உள்ளோம். ஏனெனில் அராஜக கொடுங்கோல் அரசை வெற்றிகொண்டுள்ளோம் என சீமானின் வழங் கறிஞர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங் கிணைப்பாளர் சீமான் மீதான தேசிய பாது காப்பு சட்ட நடவடிக்கையை இரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதற்கிடையே செய்தியாளர்களிடம் பேசிய வழக்கறிஞர் சந்திரசேகர் இந்த வெற்றி நீதிமன்றத்தின் மூலம் பெறப்பட்டது. விடு தலைக்கான உத்தரவு நீதிமன்றம் தந்தும் சீமானை விடுதலை செய்ய அரசாங்கம் முட்டுக் கட்டை போட்டது.

பல தடங்கல்களை கடந்து விடுதலைக் கான ஆணைகளை பெற்று வந்து நாங்கள் சிறையில் தந்துள்ளோம். அதிகாரிகளையும் தரவைத்தோம்.

சீமானை 5 மாத சிறையில் வைத்ததற் காக தமிழக அரசு மீது வழக்கு தொடர உள் ளோம் என்றார். (ஸ்ரீ-4)

பாரதச் செய்திகள்

# விஜயகுமார் குடும்பத்தின் மீது வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு

நடிகை வனிதா கொடுத்த புகாரின் அடிப் படையில் நடிகர் விஜயகுமார் அவரது மனைவி மஞ்சுளா, விஜயகுமாரின் முதல் மனைவி மகன் அருண்விஜய் ஆகியோர் மீது பெண் வன்கொடுமை சட்டத்தின் கீழ் புறநகர் மத்திய குற்றப் பிரிவு பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இதையடுத்து எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தில் முன் ஜாமீன் கேட்டு நடிகர் விஜயகுமார் சென்னை நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளார்.

நடிகை வனிதாவின் மகனை விஜய குமார் வீட்டிலிருந்து அழைத்து செல்வதில் ஏற்பட்ட தகராறில் நடிகர் விஜயகுமாருக்கும் அவரது மகள் வனிதாவுக்கும் இடையே மோதல் வெடித்தது. நடிகர் விஜயகுமார் கொடுத்த புகா ரின் பேரில் வனிதா கணவர் ஆனந்ராஜனை மதுராவாயல் பொலிஸார் கடந்த சில நாட்க ளுக்கு முன் கைது செய்து சிறையில் அடைத்த னர். கணவனை கைது செய்ததால் கொதித் துப்போன நடிகை வனிதா தனது தந்தை விஜய குமார் அவரது மனைவி மஞ்சுளா, விஜய குமா ரின் முதல் மனைவியின் மகன் அருண் விஜய் ஆகியோர் மீது மதுரவாயல் பொலிஸில் புகார் அளித்தார்.

இப்புகாரின் அடிப்படையில் நடிகர் விஜய குமார், மஞ்சுளா மற்றும் அருண்விஜய் மீது இந்திய தண்டனை சட்டம் 341 , 323 ஆகிய பிரி வுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின் இந்த வழக்கை புறநகர் மத்திய குற்றப் பிரிவு பொலிஸார் விசாரணைக்கு டி.ஜி.பி.லத் திகா சரண் உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து புறநகர் கமிஷனர் அலுவலகத்திற்கு கடந்த மாதம் இறுதியில் கணவர் ஆனந்தராஜனுடன் நடிகை வனிதா வந்தார். அங்கு புறநகர் கமிஷனர் ஜாங் கிட்டை சந்தித்து விளக்கம் அளித்தார். சென்னை நகர பொலிஸ் கமிஷனர் ராஜேந் திரனை சந்தித்து அளித்த புகாரில் தன்னு டைய குழந்தையை கழுத்தை நெரித்து கொல்ல முயற்சி நடக் கிறது. மேலும் அருண் விஜய் தொலைபேசி யில் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இத னால் தனக்கும் தன்னு டைய குழந்தையின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றார்.

அருண்விஜய் உட்பட நான்கு பேர் மீது நுங் கம்பாக்கம் பொலிஸார் புதிய வழக்கு ஒன்றை பதிவு செய்தனர். இந் நிலையில் நடிகை வனிதா கொடுத்த புகாரின்படி புறநகர் மத்திய குற்றப் பிரிவு பொலிஸார் நடிகர் விஜயகுமார் அவரது மனைவி மஞ்சுளா, விஜயகுமாரின் முதல் மனைவி மகன் அருண் விஜய் மீது பெண் வன் கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு ஒன்றை புதி தாக பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் தேடப்படும் குற்றவாளிக ளாக அவர்கள் அறிவிக்கப்பட்டனர். இதைய றிந்த நடிகர் விஜயகுமார் பெண் வன்கொடு மை சட்டத்தில் எப்படியும் கைதாகி விடுவோம் என்ற பயத்தில் முற்பிணை மனுவை நீதிமன் றில் தாக்கல் செய்தார். (ஸ்ரீ-4)

# இந்திய தூதருக்கு அவமதிப்பு

அமெரிக்க விமான நிலையத் தில் இந்திய தூதர் மீரா சங்கரை தனியாக அழைத்துச் சென்று பாதுகாப்பு என்ற பெயரில் சோதனை நடத்தி அவமதித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. புடைவை கட்டியிருந்த தால் தான் மீரா சங்கரை சோதனையிட்டோம் என அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

அமெரிக்காவுக்கான இந்திய தூதராக பணி யாற்றுபவர் மீரா சங்கர்.இவர் கடந்த 4 ஆம் திகதி அமெரிக்காவின் மிசிசிப்பிக்குச் சென்றி ருந்தார்.அங்கு பல்கலை விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

பின் பால்டிமோர் செல்வதற்காக மிசிசிப் பியில் உள்ள ஜாக்சன் எவர்ஸ் சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தார்.இந்திய பாரம் பரிய உடையான புடைவையை அவர் கட்டியி ருந்தார். அப்போது அங்கு வந்த பாதுகாப்பு அதி காரிகள் மீராவை தனியாக அழைத்துச் சென் றனர். உங்களை சோதனையிட வேண்டியுள் ளது என அழைத்துச் சென்றனர்.

அவர்களிடம் நான் அமெரிக்காவுக்கான இந்திய தூதரக அதிகாரி என்னை சோதனை யிடுவது சரியான நடவடிக்கை அல்ல என்றார். அதற்கான அவணங்களையும் அவர்களிடம் காட்டினார். ஆனால் பாதுகாப்பு அதிகாரிகள் அதை கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. அங்கிருந்த பெண் அதிகாரி மீரா சங்கரை கைகளால் தடவி சோதனை செய்தார். இத னால் மீரா சங்கர் கடும் அதிருப்தியும் கோப மும் அடைந்தார்.

பின்னர் அவரை விமானத்தில் செல்ல அனு மதித்தனர். அமெரிக்காவில் இந்திய தூதரக பெண் அதிகாரிக்கு நேர்ந்த இந்த அவமரி யாதை பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து அமெரிக்கா வில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள், அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்துக்கு புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மிசிசிபி விமான போக்குவ ரத்து பாதுகாப்பு நிர்வாக அதிகாரிகள் கூறி யதாவது,

கடந்த நவம்பர் முதலாம் திகதியிலிருந்து அமெரிக்காவில் விமானபோக்குவரத்து பாது காப்பு தொடர்பாக புதிய விதிமுறைகள் அமுல் படுத்தப்பட்டுள்ளன. இதன்படி நாங்கள் சந் தேகப்படும் நபர் யாராக இருந்தாலும் அவர் களை கைகள் மூலம் சோதனையிட முடியும். அன்று விமான நிலையத்தில் இருந்தவர்க ளில் மீராசங்கர் மட்டும் தனித்து தெரிந்தார். அவர் புடைவை அணிந்திருந்தது தான் இதற்கு காரணம். அதனால் தான் அவரை சோதனையிட நேர்ந்தது. மேலும் ஜாக்சன் விமான நிலையத்தில் ஸ்கிரீனர் மூலம் சோத னையிடும் வசதி இன்னும் செயற்படுத்தபட வில்லை. இதனால் கைகளால் சோதனையிட் டோம். இவ்வாறு அவர்கள் மேலும் கூறினர்.

இது குறித்து மிசிசிபி லெப் கவர்னர் பில் பிரி யாண்டின் செய்தித் தொடர்பாளர் கூறுகை யில்,

இந்திய தூதரகம் சார்பில் தெரிவிக்கப்பட் டுள்ள புகார் குறித்து விசாரிக்கவுள்ளோம்.



அதற்கு முன் விமான 'நிலையத்தில் என்ன நடந்தது என்பது குறித்த விரிவான அறிக் கையை கேட்டுள்ளோம் என்றார்.

இச் சோதனை நடவடிக்கை குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்திய தூதரக அதிகாரியை இது போன்ற சோதனைக்கு உட்படுத்தியதை ஏற் றுக்கொள்ள முடியாது. இது போன்ற சம்பவங் கள் மீண்டும் ஒரு முறை நடக்கக்கூடாது. இந்த விடயத்தை அமெரிக்க வெளியுறவு அமைச் சகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்வோம். தூதரக அதிகாரிகளை சோதனையிடுவதில் ஏற்கனவே உள்ள உயரிய மரபுகள் கடைப் [illegible] என்றார். (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரை முழுமையாக சுவைத்தது இந்தியா; தோல்வியின் ஏமாற்றத்துடன் நியூசிலாந்து அணி

(சென்னை)

நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்திய அணி 5:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து அணி 3டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் டெஸ்ட் தொடரை இந்திய அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தொடர்ந்து நடைபெற்ற 4 ஒருநாள் போட்டிகளிலும் வெற்றிபெற்ற இந்திய அணி தொடரை 4:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் ஐந்தாவதும், இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்று சென்னையில் நடைபெற்றது.

இப் போட்டியில் ஆறுதல் வெற்றிபெற்றுத் தொடர் தோல்வியிலிருந்து மீளவேண்டிய கட்டாயத்தில் நியூசிலாந்து களமிறங்கியது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சிகொடுத்தது குப்திலின் ஆட்டமிழப்பு.

ஆரம்பத் துடுப்பாட்டவீரர் குப்தில் பூச்சியத்துடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஹவ் களமிறங்க மறுமுனையில் பிரன்டன்மக்குலம் 14 ஓட்டங்களுடன் நெகராவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.



அடுத்துவந்த ரெய்லர் 09 ஓட்டங்களுடன் வெளியேற நியூசிலாந்து அணி 5.4 ஓவர்களில் 28 ஓட்டங்களை எடுத்து 03 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து 04-வது விக்கெட்டுக்காக இணைந்த ஹவ்- ஸ்ரைரிஸ் ஜோடி பொறுப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தனர்.

இந்த ஜோடி 43 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது ஹவ் 23, ஸ்ரைரிஸ் 24 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில் பின்வரிசையில் களமிறங்கிய வீரர்கள் சோபிக்கத் தவற நியூசிலாந்து அணி 27 ஓவர்களில் 103 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் பிராங்லின் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ரவிச்சந்திரன் அஸ்வின் 03 விக்கெட்டுக்களையும், நெகரா, யுவராஜ் சிங், யூசுப்பதான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், பிரவீன் குமார் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்குத் 50 ஓவர்களில் 104 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு அணித்தலைவர் காம்பீர் மூன்றாவது பந்தில் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

அடுத்துக்களமிறங்கிய விராட் ஹோலி 02 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 3.2 ஓவர்களில் 10 ஓட்டங்களை எடுத்து 02 விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த பட்டேல், யுவராஜ் சிங் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வழங்கினர்.

இந்த ஜோடியின் இணைபிரியாத ஆட்டத்தின் மூலம் இந்திய அணி 21.1 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களையிழந்து 107 ஓட்டங்களைக் குவித்து 08 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இவ் வெற்றியின் மூலம்இந்திய அணி 05 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 5:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

இதில் பார்த்திவ் பட்டேல் 70 பந்துகளில் (06 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 56 ஓட்டங்களையும், யுவராஜ் சிங் 46 பந்துகளில் (06 பவுண்டரிகள், 02 சிக்ஸர்கள் உட்பட) 42 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் நாதன் மக்குலம், அணித்தலைவர் விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு சகல துறைகளிலும் யொலித்த யுவராஜ் சிங் ஆட்நாயகனாகத் தெரிவானதுடன் தொடர் நாயகன் விருதை அணித்தலைவர் காம்பீர் சுவீகரித்தார்.

## பிரிட்டன் செல்லும் மாணவர்களின் விசா அனுமதியில் மட்டுப்பாடுகள்!

(கொழும்பு)

பிரித்ததானியாவுக்கான மாணவர் விசா அனுமதிகள் மட்டுப்படுத்தப்படவுள்ளன என்று அந்நாட்டின் குடிவரவு அமைச்சர் டொமியன் கிறீன் தெரிவித்துள்ளார்.

புதிய நடைமுறைகளின்படி விசா அனுமதி பெற்றுவந்து கற்கை நெறிஒன்றை நிறைவு செய்யும் மாணவர்கள் அதன்பின் வேலை [illegible]றை தேடிக்கொள்கின்றமைக்காக பிரித்தானியாவில் தங்கியிருக்கின்றமைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

விதிமுறைகள், ஆங்கிலப் பாடத்தகுதி என்பன இறுக்கமாக்கப்படவுள்ளன. மாணவர்கள் வேலைசெய்கின்றமைக்காக அனுமதியும் மட்டுப்படுத்தப்படவுள்ளது. சீனா, இந்தியா, அயர்லாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் பிரித்தானியப் பல்கலைக்கழகங்களில் கல்விகற்று வருகின்றனர் என்றும் இவர்களது எண்ணிக்கையை பிரித்தானிய அரசு கட்டுப்படுத்த விரும்புகிறது என்றும் ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாணவர் விசா அனுமதி முறையைப் பயன்படுத்தி சட்டவிரோத குடியேற்றவாதிகள் பிரித்தானியாவுக்குள் நுழைகின்றமையைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உண்மையான கல்வி நோக்கம் கொண்ட திறமைசாலி மாணவர்கள் குறுகிய காலத்திற்கு பிரித்தானியாவுக்கு வந்து நோக்கம் நிறைவேறிய பின்னர் நாடு திரும்பவேண்டும் என்றே நமது அரசு எதிர்பார்க்கின்றது இவ்வாறு கூறியுள்ளார் அமைச்சர் டொமியன் கிறீன்.

பட்டதாரிக் கற்கைகளுக்குக் கீழ்ப்பட்ட கற்கை நெறிகளை தொடர்கின்றமைக்கான அனுமதிகளை இல்லாமல்செய்து ஆங்கிலப் பாடத் தகுதி நடைமுறைகளை இறுக்கமாக்கி மாணவர்கள் வேலைசெய்யும் வசதிகளையும் கட்டுப்படுத்துவதன் மூலம் இதனைச் சாத்தியமாக்க பிரித்தானிய அரசு திட்டமிட்டுள்ளது.

திறமைசாலி மாணவர்களை ஈர்க்கின்றமை எமக்கு அவசியமானது. ஆனாலும் யார் வரலாம்? எவ்வளவு காலம் இங்கு தங்கியிருக்கலாம்? என்பதை நாம் தெரிவுசெய்ய விரும்புகிறோம். இப்படியும் அமைச்சர் சொன்னார். பட்டதாரிக் கற்கைநெறிகளுக்கு கீழ்ப்பட்ட கற்கைநெறிகளை தொடர்கின்றமைக்காக வரும் பெருமளவு மாணவர்கள் வேலை ஒன்றைத் தேடிக்கொண்டு இங்கேயே தங்கிவிட விரும்புகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு வருடமும் பிரித்தானியாவுக்குள் வருபவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் மாணவர் விசா அனுமதி நடைமுறை மூலமே வருகின்றனர். குறிப்பிட்ட கற்கை நெறி ஒன்றை நிறைவுசெய்யும் மாணவர்கள் மேலும்கல்வியைத் தொடர விரும்பினால் சொந்தநாட்டுக்குத் திரும்பிச் சென்று மீண்டும் விண்ணப்பித்து வர வேண்டும் என்ற நடைமுறையும்இனிவரும் காலங்களில் வரவுள்ளது என்றும் பிரித்தானிய குடிவரவுத் துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியை எம்.பிக்களுக்கு அதிகரிக்கவேண்டும்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதி ஒதுக்கீட்டை 10 மில்லியன் ரூபாயாக அதிகரிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று கோரிக்கை விடுத்தார்.

நிதியமைச்சுக்கான நிதியொதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

தற்போது பன்முகப்படுத்தப்பட்ட நிதியாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வருடாந்தம் 5 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. ஆனால் வடக்குக்கிழக்குப் பிரதேசம் யுத்தத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இத் தொகை போதாமல் உள்ளது. எனவே இத் தொகையை 10 மில்லியன் ரூபாயாக அதிகரிக்க வேண்டும் எனக் கூறினார்.

அதேவேளை யாழ்ப்பாணத்தின் கனிய வளங்கள் சுரண்டப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். அங்குள்ள சுண்ணாம்புக்கற்கள் பெருமளவில் சுரண்டப்படுவதாகவும் இதனால் சுற்றாடல் பாதிப்புக்களும் ஏற்படுவதாகவும் அவர் கூறினார். (ச-5)

## காணாமல் போன...

யிலுள்ள பாழடைந்த வீட் டிற்கு பின் னால் இருந்த கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

அக் கிணறு அமைந்துள்ள வீட்டைப் பராமரிப்பவர் நேற்று காலை 7.30 மணிக்கு அங்கு சென்றபோது கிணற்றில் நீர்மட்டம் உயர்வடைந்த நிலையில் சடலம் மிதப்பதைக் கண்டுள்ளார்.

இது குறித்து அயலவர்களின் உதவியுடன் நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு பொலிஸாரின் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டது.

பிரஸ்தாப யுவதி அணிந்திருந்த நகைகள் சடலத்திலேயே காணப் பட்டதாகவும் அவரின் செருப்பு மற்றும் தொப்பி என்பன வெவ்வேறு இடங்களில் காணப்பட்டதாகவும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

யுவதியின் வீட்டிலிருந்து சுமார் 150 மீற்றர் தூரத்திலிருந்த கிணற்றிலிருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

யுவதியின் மரணம் தொடர்பில் சந்தேகம்நிலவுவதால் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். இச் சம்பவத்தையடுத்து வடமராட்சியில் பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது. (ச-24,35,52)





இடம்பெயர்ந்து வவுனியா முகாம்களில் வதியும் மாணவர்களுக்குரிய இலவசப் பாடநூல் விநியோகம் வவுனியா காமினி மகாவித்தியாலயம், கதிர்காமர் நலன்புரி முகாம், ஆனந்தகுமாரசுவாமி நலன்புரி முகாம் போன்றவற்றில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மாணவர் ஒருவருக்கு பாடநூலை விநியோகிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். இந்நிகழ்வில் வவுனியா மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அலுவலர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 கார்களின் ஊர்வலத்துடன்...

டத்தின் மூலம் அவரை நீண்டகாலத்திற்கு சிறையில் அடைக்க முயன்றது.

தேசிய பாதுகாப்பு சட்டத்தின் அடிப்படையில் சீமானை தடுத்து வைத்திருப்பது தவறானது என்ற அடிப்படையில் நேற்று முன்தினம் சென்னை உயர் நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பை அளித்தது.

இந் நிலையில் நீதிமன்ற உத்தரவின் பிரதி சிறைச்சாலைக்கு வந்து சேர்ந்ததும் பிற்பகல் அளவில் இயக்குநர் சீமான் விடுதலையானார்.

விடுதலையாகி வெளிவந்த இயக்குநர் சீமானுக்கு கட்சியின் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தாரை தப்பட்டை முழங்க பெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. தொண்டர்கள் மத்தியில் 15 நிமிடம் உரை நிகழ்த்திய சீமான் தமிழக முதல்வர் கருணாநிதியையும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியையும் கடுமையாக தாக்கிப் பேசினார்.

தன்னை விடுதலை செய்த நீதிபதிக்கு சீமான் நன்றி தெரிவித்தார். அவர் தனது பேச்சில் நான் நீதிபதிக்கு நன்றி தெரிவிப்பது என்னை விடுதலை செய்தமைக்காக அல்ல.

ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து நீதிபதி கொண்டுள்ள புரிதலுக்கும் இது தொடர்பில் நீதிபதி தமிழக அரசை கண்டித்தமைக்கும் நான் நன்றி கூறக்கடமைப்பட்டவன் என சீமான் குறிப்பிட்டார்.

சீமானின் உரையைத் தொடர்ந்து 300 கார்கள் புடை சூழ சீமானை அவரது தொண்டர்கள் சிறைவாசலில் இருந்து வேலூர் நகரத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். (ச-5)

## 2011 இற்கான...

போதைய அரசாங்கம் தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய அபிலாசை என்ற குறிக்கோள்களை முன்னிலைப்படுத்திச் செயற்பட்டதன் காரணமாகவே பயங்கரவாதத்தை ஒழிக்க முடிந்ததாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ச-5)

## இலங்...

செயற்பட்டிருந்தால் புலி ஆதரவாளர்களினால் ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்காது.

பொதுமக்களின் பணத்தில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்துவரும் தூதுவர்களும், உயர்ஸ்தானிகர்களும் கடமைகளை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாதென அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)


புலமைப் பரிசில்-2011

பயிற்சிப் பரீட்சை ③ல் அதிகூடிய புள்ளிகளைபெற்ற பரிசுக்குரிய மாணவர்கள்

- ந.கஜேந்திரன் -187 (யா/புனித ஜோன் பொஸ்கோ)
- ய.அனோஜியஸ்-176 (யா/புனித ஜோன் பொஸ்கோ)
- க.கியூறி-176 (யா/புனித ஜோன் பொஸ்கோ)

அடுத்த பரீட்சை ④
12.12.2010 (ஞாயிறு)
காலை 8.00 / 9.00 / 10.00
மாலை 2.00 / 3.00 / 4.00
வெளி மாணவர்களும் விரும்பிய நேரங்களில் பரீட்சைக்கு தோற்றலாம்.
நாவலர்
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்
(சி-1795)


# சிறைகளிலுள்ள கைதி...

மாற்றுக்கருத்துக்களை கொண்டவர்களின் சுதந்திரத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவரான நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

சீனாவின் நோபல் சமாதானப் பரிசை வென்றெடுத்த லியூ சியாலோவோ போன்ற மாற்றுக்கருத்துக்களுக்காக போராடுபவர்களை தெளிவாக குறிப்பிட்டுக்காட்டும் வகையில் ஜனநாயகத்தை மேம்படுத்துவதற்காக குரல் கொடுத்ததற்காக சிறையில் வைக்கப்பட்ட சகல கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் தினம் கடந்த புதன்கிழமை ஜெனீவாவில் அனுஷ்டிக்கப்பட்டது. நேற்று நியூயோர்க்கில் அனுஷ்டிக்கப்பட்டது.

சமநேரத்தில் ஒஸ்லோவில் நோபல் சமாதானப் பரிசை வென்றெடுத்த லியூ, அவர் சமுகமளிக்காத நிலையில் கௌரவிக்கப்பட்டார்.

விமர்சனமானது குற்றமல்ல என்பதை அரசாங்கங்கள் அங்கீகரிக்க வேண்டும் என நான் அழைப்பு விடுக்கிறேன்.

ஜனநாயக கோட்பாடுகளையும் மனித உரிமைகளையும் நியாயப்படுத்துவதற்காக சமாதானமான வழிமுறையில் தமது அடிப்படையில் உரிமைகளைப் பிரயோகித்தவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் யாவரையும் விடுவிக்குமாறு கோருகிறேன் என்றும்;

மாற்றுக் கருத்துக்களை கொண்ட பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள், குடும்பங்கள் தொடர்பாக அவர் நியாயப்படுத்தி கருத்துத் தெரிவித்திருந்த போதிலும் தனது இருபக்க அறிக்கையில் லியூவின் பெயரை அவர் குறிப்பிடவில்லை.

இலங்கை, ஈரான் போன்ற நாடுகளின் உரிமை மீறல்கள் தொடர்பாக நவநீதம்பிள்ளை வெளிப்படையாக பேசியுள்ளார். கடந்த காலத்தில் ரஷ்யா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளையும் அவர் விமர்சித்திருந்தார்.

கடந்த சில நாட்களாக மேற்குலகில் உள்ள சீன அதிருப்தியாளர்களும் அரச சார்பற்ற மனித உரிமை குழுக்கள் சிலவும் ஐ.நாவை விமர்சித்து வருகின்றன.

ஒஸ்லோவுக்கு அரசாங்கங்கள் சில செல்வதை தடுப்பதற்கான அழுத்தத்தை சீனா கொடுப்பதற்கு இடம் அளித்ததாக அவை விமர்சித்து வருகின்றன.

ஆனால் நோபல் பரிசு குழுவிடமிருந்து அழைப்பு ஒரு போதுமே நவநீதம்பிள்ளைக்கு விடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் விடுக்கப்பட்டிருந்தால் அவர் நிராகரிக்கமாட்டார் எனவும் அவரின் பேச்சாளர் ரூபேர்ட் சொல்லிலே றொய்ட்டருக்கு கூறியுள்ளார். (ச-5)

## இலங்கை...

பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸார் விமானப் படையினருடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

ஆயினும் தங்கள் விமானம் எதுவும் அந்த பிரதேசத்தில் பறப்பில் ஈடுபடவில்லை என்று விமானப்படையினர் மறுத்துள்ளனர்.

அதன் காரணமாக கரந்தெனிய பிரதேசத்தில் ஒரு பதற்றம் தொற்றிக் கொண்டுள்ளதுடன் விமானப்படையும் மர்ம விமான விவகாரத்தில் அச்சத்தில் உறைந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. (எ-1)


உடன் தேவை
➲ பத்திரிகை மடிப்பவர்கள் (இரவுக் கடமை)
➲ சிற்றூழியர்கள் (பகல் ,இரவுக் கடமை)
நேரில் வரவும்
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை , பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளப் பெருமக்களே!..
மாபெரும் விலைக் கழிவுடனான தள்ளுபடி விற்பனை
- பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்களுக்கு 10% தொடக்கம் 20% வரையான கழிவு வழங்கப்படும்.
- அப்பியாசக் கொப்பிகள் விசேட கழிவு விலையில் வழங்கப்படும்.

ஏனைய ஸ்ரேசனரிப் பொருட்கள், விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் ,வைற் போட்,கிறீன் போட் வகைகள், OVER HEAD PROJECTOR ,O.H.P.SCREEN, LAMINATOR, BINDING MECHINE உட்பட அனைத்து வகை கல்விசார் உபகரணங்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட இன்றே விரையுங்கள்.

அப்பியாசக் கொப்பிகள் நீங்கலாக ரூ. 2000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அழகிய கோப்புகள் வைக்கக் கூடிய றெச்சின் பாக் (Regsin Bag) ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

வாடிக்கையாளரின் நலன் கருதி சனி .ஞாயிற்றுக் கிழமைகளிலும் சேவை வழங்கப்படும்
(C-1790)
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212 ,கே.கே.எஸ். வீதி ,யாழ்ப்பாணம்.

MyWay English ......
அரச அலுவலர்கள், ஆசிரியர்கள், உயர்கல்வி மாணவர்களுக்கான பயிற்சிநெறி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் இன்று ஆரம்பம்
இவ்வருடம் AL எழுதி பல்கலைக்கழகத்துக்கு தெரிவாவோரும் பயிற்சியில் சேரலாம்
MYWAY 0773363456
182, Stanley road

A/L - 2010
(DAY CLASS)
கலை, வர்த்தகப் பிரிவுகள்
டிசம்பர் - 13
திங்கள் - காலை 8 மணி
(C-1784)
DMI
JAFFNA

NALIN INFORMATION TECHNOLOGIES PVT.LTD
2010 ஆண்டு நிறைவை முன்னிட்டு
SPECIAL OFFERS
எமது நிறுவனத்தில் எங்குமில்லாத மாபெரும் விலைக்கழிவுகளில் கணனிகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
கணனிகளிற்கு 3 வருட உத்தரவாதம்வழங்கப்படும்.
(C-1796)
NALIN Information Technologies PVT LTD
1954, PARAMESWARA JUNCTION, TP: 021 2221166, 0777667974

PERSONAL CLASS
தனியாகவோ குழுவாகவோ இலகு முறையில் நேரில் வந்து கற்பிக்கப்படும்
- தனிப்பட்ட கவனிப்பு
- அலகு ரீதியான மீட்டல்
- இறுதிப் பரீட்சைக்கான தயார்ப்படுத்தல்

A/L
தொடர்பு: KAJEEPAN 0759401921, 0778448622
கணக்கீடு- A/L 2011,2012,DAY

CIMA UK
10,000/= Only Stage1
இது வரை 100% சித்தி
CIMA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையம் (Listed College), பரீட்சை நிலையம்
MCS இல் CIMA அனைத்து கற்கை பிரிவுகளும் எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மாதிரிப்பரீட்சைகள்
Closing Date 12.12.2010
MCS
Job Gurantee Skill Migration, Australia,Canda,UK
*Free Courses - IELTS-TOEFL, ICDL
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324, பல்கலைக்கழக சந்தி, பலாலி வீதி

University of Colombo
A/L? Pass → BIT
No → FIT → BIT

BIT மாணவர்களுக்கு மேலதிக கட்டணம் இன்றி
BCS, Computer Engineer(USA), ICDL
புலமைப்பரிசில், பதிவுகளுக்கு நேரில்,
SMS your name & course to 772 395 895 & Get Schol.
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
Closing Date 12.12.2010
Call 772395895
கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

புதுக் கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் கார்த்திகை மாதம் 12.12.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணி முதல் 12.00 மணி வரையுள்ள சுபவேளையில் நவீன காட்சியறையுடன் செலான் வங்கிக்கு அருகாமையில்
புதிய வினோ நகை மாடம்

திறக்கப்பட இருப்பதால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர், பெரியோர்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றோம்.
பிரதான வீதி, சங்கானை, 0776002588
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
முகாமையாளர்
மு.வினோதன்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org